Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

C/704



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (08.05.2011) பக்கங்கள் 12 ஓசை – 221

## பயங்கரவாதிகளுக்கு நிதி; தடுத்து நிறுத்துவது எப்படி?

(கொழும்பு)

பயங்கரவாதிகளின் நிதி மூலங்களைத் தடுப்பது எப்படி என்பது குறித்து தென்கிழக்காசிய நாடுகள் ஒன்று கூடி ஆராயவுள்ளன.

பயங்கரவாத செயற்பாடுகளுக்கான நிதியுதவிகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விசேட மாநாடு எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட மாநாட்டில் தென் கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த பிரதம நீதியரசர்கள் உள்ளிட்ட 30 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக பிரதம நீதியரசர் அசோக்க என். சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் மற்றும் இலங்கை உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தமா நாடு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றுதல் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கான அழுத்தங்கள் ஆகியன தொடர்பில் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஓசாமாவின் கடைசிப் பேச்சு



(கொழும்பு)

பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்ட அல்கொய்தா இயக்கத் தலைவர் ஓசாமா பின்லேடனின் குரல் பதிவு கொண்ட ஓடியோ விரைவில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓசாமா கொல்லப்படுவதற்கு ஒருவாரம் முன்னதாக அந்த ஓடியோ பதிவு செய்யப்பட்டதாகவும், விரைவில் அது வெளியிடப்படும் என்றும் அல்கொய்தா தெரிவித்துள்ளது.

ஓசாமா கொல்லப்பட்டதற்காக அமெரிக்கா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளை பழிவாங்குவோம் என்று அவரது ஆதரவாளர்கள் அறிவித்துள்ளனர். இந்நிலையில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளை மீட்டெடுக்க எமது பயணம் தொடரும்



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் வென்றெடுக்கப்படும் வரை தமிழ் மக்களுக்கான எமது அரசியல் பணி தொடரும் என்றும், இதற்காக நேர்மையானதும், நியாயமானதுமான அரசியலை நடாத்தவே நாம் விரும்புகிறோம். இதற்காக யாரையும் பழிவாங்கும் நோக்குடன் அரசியல் நடாத்த நாம் விரும்பவில்லை என்றும் அமைச்சர் டக்ளஸ தேவானந்தா தெரிவித்தார்.**

(11ஆம் பக்கம் பார்க்க)



## கடற்கொள்ளையர்களின் புதிய இலக்கு இலங்கை

### பாதுகாப்பு அதிகாரிப்பு

(கொழும்பு)

சோமாலியக் கொள்ளையர்களின் அடுத்த இலக்கு இலங்கை கடற்பரப்பாக இருக்கலாம் என சர்வதேச கடற் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் அமைந்துள்ள சர்வதேச கடற்பாதுபாப்பு பிரிவின் கடற்கொள்ளை தகவல் மத்திய நிலையத்தின் பிரதானி நொயல் சூங் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சோமாலியக் கொள்ளையர்கள் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்து வருவதாகவும் அவர்கள் தற்சமயம் இந்தியாவின் மேற்கு கடற்பகுதியில் கப்பல்களை கொள்ளையிட்டு வருவதாகவும், இந்த நிலையில் இந்த செயற்பாடு இலங்கை கடற்பகுதியை நெருங்கும் நிலை காணப்படுவதாகவும் சர்வதேச கடற்பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## இரட்டைவேடமிடும் சர்வதேச சமூகம்

### அமைச்சர் விமல் வீரவன்ச சீற்றம்



(கொழும்பு)

வலிமையான நாடுகள் மற்றும் வலிமை குன்றிய நாடுகள் என்று பட்டியலிட்டு அந்தந்த நாடுகளுக்கேற்ப சர்வதேச சமூகம் இரட்டை வேடம் போடுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா பின்லேடனை கொன்றொழித்த சந்தர்ப்பம் மற்றும் இலங்கை அரசாங்கம் புலிகளின் தலைவரை அழித்தொழித்த சந்தர்ப்பம் ஆகிய இரண்டு நிகழ்வுகளில் சர்வதேசம் எப்படி நடந்து கொண்டது என்று கவனித்தாலே அதன் இரட்டை வேடம் புலப்படும் என்றும் சுட்டிக்காட்டினார். நேற்று முன்தினம் உலப்பனையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் கொடிய பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டுக்கு அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்கிக் கொடுத்துள்ளது. ஆனால், அது இன்றைக்கு அரசாங்கத்துக்கே ஆபத்தானதாக மாற்றப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், நிபுணர் குழு அறிக்கை என்ற பெயரில் ஒரு மூட்டையைத் தோள் மீது தூக்கிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.நிபுணர் குழு கலைந்தது; இரகசியம் பேணப் பணிப்புரை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்கவென ஐ.நா செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தருஸ்மன் தலைமையிலான மூவர் அடங்கிய நிபுணர் குழுவை ஐ.நா. செயலாளர் நாயகம் கடந்த வருடம் நியமித்திருந்தார்.

இக்குழு பல வழிகளில் சாட்சியங்களைப் பெற்று இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இரண்டு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட போர்குற்றங்கள் தொடர்பாக 192 பக்க அறிக்கையாக தயாரித்து அண்மையில ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கையளித்ததோடு, அவர் அதனை அம்பலப்படுத்தியிருந்தார்.

அவ்வாறான நிலையில் நிபுணர் குழுவின் செயற்பாடுகள் முற்றுப்பெற்றுள்ளதால் நேற்று முன்தினம் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் அதனைக் கலைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நிபுணர் குழுவிடம சாட்சியமளித்தவர்களின் இரகசியத்தன்மை எதிர்வரும் இருபது வருடங்களுக்கு பேணப்பட வேண்டுமென நிபுணர்குழு உறுப்பினர்களுக்கு பான்கீமூனினால் பணிபுரை விதிக்கப்பட்டுள்ளது.

## இராஜதந்திர சேவை விரைவில் மறுசீரமைப்பு

(கொழும்பு)

இலங்கையின் கடல் கடந்த இராஜதந்திர சேவை மறு சீரமைக்கப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக ஐரோப்பிய மற்றும் அரபு நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்களாக புது முகங்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பன்னிரண்டு நாடுகளுக்குப் புதிய தூதுவர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக நியமிக்கப்பட உள்ளவர்களின் பெயர், விபரங்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளதாக வெளிநாட்டமைச்சின் ஊடகச் செயலாளர் சரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

லெபனான், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, சிங்கப்பூர்,

(12ஆம் பக்கம் பார்க்க)

# பதிவுசெய்யப்படாத மருந்தகங்கள் வடபகுதியில் மிகவும் அதிகம்!!

(கொழும்பு)

வடபகுதியில் அதிகளவான மருந்தகங்கள் பதிவு செய்யப்படாமல் இயங்கி வருவது கண்டறியப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பதிவு செய்யப்படாமல் இயங்கும் மருந்தகங்கள்மீது விரைவில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பதிவு செய்யப்படாத சுமார் 275 மருந்தகங்கள் நாடு முழுவதும் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகளவிலான மருந்தகங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய மருந்தகங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது. இதன் காரணமாக மருந்துப் பொருள் கொள்வனவின் தரம் குறித்து பாரிய சிக்கல் ஏற்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வடமாகாணத்தில் அதிக பட்சமாக 77 மருந்தகங்கள் இதுவரை பதிவுசெய்யப்படாமல் உள்ளதாகவும், கிழக்கு மாகாணத்தில் 65 மருந்தங்களும், மேல் மாகாணத்தில் 41 மருந்தகங்களும் இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளது.

நாட்டில் இதுவரை மூவாயிரத்து 172 மருந்தகங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளது. பதிவுசெய்யப்படாத மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர மானித்துள்ளது என அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மைதானம் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, தற்போது விளையாட்டு மைதானம் மிகச்சிறந்த முறையில் திருத்தம் செய்யப்படுவதற்காக, அதன சுற்று மதில்கள் மற்றும் மைதானத்தைச் சுற்றியுள்ள கால்வாய்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் விசமிகளின் செயறபாடுகளினால் சுற்றுமதில்களும், மைதானத்தின் பிரதான வாயில் கதவுகள் சேதமாக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

Aviva NDB காப்புறுதி நிறுவனம் மற்றும் தினமுரசின் ஊடக அனுசரணையுடன் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமானது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 12 முன்னணிக் கழகங்கள் மோதும் இப்போட்டியில் பிரதம அதிதியாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் சாள்ஸ் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

நேற்று நடைபெற்ற போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 25-11, 25-19, 20-25, 25-18 என்ற செற் கணக்கில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

## மின்சாரம் நிறுத்தம்

(கிளிநொச்சி)

வடக்கின் வசந்தத்தின் கீழ் இலவச மின் இணைப்பை பெறுபவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையுமே அந்த சேவையை பெறமுடியுமென கிளிநொச்சி பிராந்திய பிரதம பொறியிலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார் வன்னியில் இடம்பெற்ற போரின் போது பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய மக்களிற்கு ஆறுமாத காலத்திற்கு மின்சாரம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது இதன் பிரகாரம் தற்போது கிளிநொச்சியில் மக்கள் மீள்குடியேறி ஆறு மாதங்கள் கடந்து விட்ட நிலையில் இந்தத் திட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வடமராட்சி கிழக்கில் திருடர்கள் கைவரிசை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள வேம்படிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

குறித்த வீட்டு உரிமையாளர் கடற்தொழிலுக்குச் செல்வதால் நித்திரையில் இருந்து எழுந்து இரவு 12.45 மணியவில் கைத்தொலைபேசியில் நேரத்தைப் பார்த்துவிட்டு உறக்கத்தின் பின்னர் எழுந்து பார்த்தபோது கைத் தொலைபேசியைக் காணவில்லை. ரோசலைட்டையும் காணவில்லை. இதனையடுத்து குறித்த வீட்டுக்காரர் தீப்பெட்டியைப் பற்றவைத்துப் பார்த்தபோது ‘சூட்கேஸ்’ பெட்டியைக் காணாததால் அவை திருடப்பட்டுள்ளமை குறித்து அன்று அதிகாலை 2 மணியளவில் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து அங்கு வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது வெளியே ஒருகால் அடி அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து வீட்டுக்காரரும் பொலிஸாரும் காலடி அடையாத்தை வைத்துக்கொண்டு சென்று பார்த்தபோது வீட்டிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஆலமரத்தின் கீழ் சூட்கேஸ் பெட்டி கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பெட்டியில் இருந்த 3 1/4 பவுண் நகைகள், 14 ஆயிரத்து 500 ரூபா பணமும், கைத்தொலைபேசியும் திருட்டு போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (38)



தினமுரசின் ஊடக அனுசரனையில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் மற்றும் சாவகச்சேரி சாஜித் படமாட உரிமையாளர் எஸ்.செல்வராசா ஆகியோர் போட்டியாளர்களுக்கு கைலாகு கொடுப்பதையும், நேற்று நடைபெற்ற போட்டிகளின் சில காட்சிகளையும் படத்தில் காணலாம்.

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

இல.88, சேவிஸ் வீதி, கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த கோபாலசிங்கம் சுகந்தா (927323257V) என்பவரது தேசிய அடைய அட்டை கிளிநொச்சி வைத்தியசாலைக்கும், இரணைமடுவுக்கும் இடை யில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் சிவன் கொமினிக் கேசன், இரணைமடு என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். (R/065)


**மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம்**
**மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கிடையே நடாத்தும்**

**கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி (செற் அப்)**

மைதானம்: மட்டுவில் வடக்கு மோகனதாஸ் வி.க.மைதானம்

காலம்: 07,08.05.2011 (சனி மற்றும் ஞாயிறு)

நேரம் : காலை 8.00 தொடக்கும் மாலை 6.00 மணிவரை

**பங்கு பெறும் கழகங்கள்**

| குழு A | குழு B |
|---|---|
| யாழ். பல்கலைக்கழக அணி | ஆவரங்கால் மத்திய வி.க. |
| மட்டுவில் வளர்மதி வி.க. | கைதடி வளர்மதி வி.க. |
| நாயன்மார்கட்டு பாரதி வி.க. | நீர்வேலி வி.கழகம் |
| காங்கேசன்துறை ஐக்கிய வி.க. | உடுப்பிட்டி நவஜீவன் வி.க. |
| ஆவரங்கால் இந்துஇளைஞர் வி.க. | அச்சுவேலி விக்கினேஸ்வரா வி.க. |
| அச்சுவேலி ஸ்ரார் வி.க. | கச்சாய் ஸ்ரீ முருகன் வி.க. |

கரப்பந்தாட்ட ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மட்டுவில் மோகனதாஸ்**
**விளையாட்டுக் கழகம்.**

அனுசரனையாளர்,/AVIVA NDB காப்புறுதி நிறுவனம்.

ஊடக அனுசரனை தினமுரசு


# வீட்டுத் தோட்டப் போட்டி யாழ்.செயலகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் “பயிர் வளர்ப்போம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்” எனும் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மரக்கறி உற்பத்திகான துரித நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் இத்திட்டமானது கடந்த காலத்தில் நிலவிய எதிர்பாராத மோசமான காலநிலை விவசாயப் பயிர்களுக்கும் பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், மரக்கறி உற்பத்தி குறைவடைந்து அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளமையால் அந்நிலைமையினைக் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்யும் முகமாகவும் நுகர்வோருக்குத் தேவையான மரக்கறிகளை வழங்கும் முகமாகவும் “மரக்கறி உற்பத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம்” செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், பாடசாலைகள், அரச வதிப்பிடங்கள், பாடசாலை மாணவர்கள் என்போர் முழுமையாக மரக்கறி உற்பத்தியில் ஈடுபடுவதற்கான அறிவுறுத்தல்கள என்பன ஏற்கனவே சம்பந்தப்பட்ட திணைகளங்கள் அனைத்துக்கும் வழங்கப்பட்டுவிட்டன.

மேலும் இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள், பாடசாலைகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் என்போருக்கு இடையிலான வீட்டுத்தோட்டப் போட்டிகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு மாவட்ட செயலகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாலுச் சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் இருபது ஓவர் கொணட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் திருநாவலர் விளையாட்டுக் கழகமும், உதய கதிர்காமம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டைமன் விளையாட்டுக் கழகமும், இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகமும், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (18)

பெரிய புத்தகங்களைப் படிப்பதாலும், அவ்வாறு படித்துப் பேரறிஞர் ஆவதாலும் ஆன்மீக உணர்வைப் பெற முடியாது என்பது நிச்சயம்.

-விவேகானந்தர்-

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கண்ணிவெடி அகற்றுவதில் புதிய திருப்பம்

மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து இடம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களை மீளக்குடியமர்த்தும் பணியில் அரசாங்கம் படிப்படியாக ஈடுபட்டு வருகிறது.

யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் புலிகளினாலும், படையினராலும் தத்தம் பாதுகாப்புக் கருதி பெருமளவிலான கண்ணிவெடிகளையும் மிதிவெடிகளையும் புதைத்திருந்தனர்.

யுத்தம் முடிவடைந்து சமாதானச் சூழல் ஏற்பட்டு இரண்டு வருடங்களாகியும் மக்கள் அவரவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதில் பெருஞ் சிரமங்களை அரசு எதிர்நோக்கி வருகிறது.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பினராலும் புதைககப்பட்ட கண்ணி, மிதிவெடிகளை அகற்றுவது என்பது அவ்வளவு இலேசான காரியமல்ல.

தினமும் உயிராபத்தை எதிர்நோக்கிய வண்ணம் இத்தகைய வெடிகளை அகற்றும் நிபுணர்கள் குழுவில் பாரிய ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இத்தகைய ஆளணிப் பற்றாக்குறை, வெடிபொருட்களை அகற்றுவதில் காலதாமதத்தை ஏற்படுத்துவதனால் மீள்குடியேற்றம் காலதாமதமாகச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

ஆளணிப் பற்றாக்குறையையும் மீள்குடியேற்ற காலதாமதத்தையும் தவிர்க்கும் நோக்கில் ஏற்கனவே கண்ணிவெடியகற்றலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் புதியவர்களையும் இணைத்துக் கொள்வதற்கான திட்டமொன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

தற்போது கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களுடனும், படைத்தரப்பினருடனும் இணைந்து செயலாற்றக் கூடிய புதிய அணியொன்றை உருவாக்கி அதனை மகேஸ்வரி நிதியத்தினூடாக நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

இதன்மூலம் பல பணியாளர்கள் இணைக்கப்படும்போது வேலை இல்லாப் பிரச்சினைக்கு ஓரளவுக்குத் தீர்வு காணப்படும் அதேநேரம், மீள்குடியேற்றமும் மற்றும் அபிவிருத்தி வேலைகளையும் துரிதகதியில் முன்னெடுத்துச் செல்ல உதவியாக இருக்கும்.

வலி.வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது. அக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டால்தான் மக்களும் அங்கு விரைவில் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள்.

வலி.வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடிகள் ஆங்காங்கே காணப்படுவதாகவும், அவை தொடர்பாகப் படைத்தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டு வருவதாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

கண்ணிவெடிகள் படிப்படியாக அகற்றப்பட்டு, அவை அகற்றப்பட்டதற்கான சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்ற பின்னரே மீள்குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

மீள்குடியேறியவர்களின் அடிப்படை வாழ்வாதாரத் தேவைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பல தரப்பினரிடமும் இருந்து எழுந்தபோதும், அவற்றைப் பற்றி உரியவர்களிடம் பேசி படிப்படியாக நிவர்த்தி செய்யலாம் என்றும் கூறப்படுகிறது.

எது எப்படி இருந்த போதும் பல தசாபத காலமாக அழிவுற்றிருந்த பிரதேசங்களை உடனடியாகக் கட்டியெழுப்பலாம் என்று கருத முடியாது.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி, அவற்றுக்கான சுமுக முடிவைக் காண்பதே புத்திசாலித்தனமான செயலாகும். இதனை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும்.

-ஆசிரியர்-

# இணக்க அரசியல் மூலம் அரசுடன் பேசி உரிமைகளைப் பெறுவதே எமது நோக்கம்

## சாரதிப் பயிற்சிப் பாடசாலைத் திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ்



(கோண்டாவில்)

இணக்க அரசியல் என்பது அடிமை வாழ்வுக்காகவல்ல எமக்கான அரசியல் உரிமைகளை அரசுடன் பேசிபெற்றுக் கொள்வதற்காகவே என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கோண்டாவிலில் அமைந்துள்ள வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலைத் திறப்பு விழாவில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவையானது மக்களுக்காகப் பணிசெய்யும் முக்கியமானதொரு சேவையாகும். முக்கியமாக மக்களது தேவைகளை இனங்கண்டு அதற்கேற்ற விதத்தில் போக்குவரத்துச் சபையின் சேவைகள் எதிர்காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதே தமது விருப்பமாகும்.

முக்கியமாக எமது மக்களது அரசியல் பிரச்சினைக்கு வெளிநாடுகள் உரிய தீர்வினைப் பெற்றுத் தரமுடியாது. எமக்கான பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கின்றார்.

அதற்காகவே நாம் இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகின்றோம் என்பதுடன் இணக்க அரசியல் என்பது அடிமை வாழ்வு வாழ்வதற்காகவல்ல எமக்கான உரிமைகளை அரசுடன் பேசிப்பெற்றுக்கொள்வதற்காகவே.

இந்நிலையில் மக்களுடைய ஆதரவும் பக்கபலமும் இருக்கும் பட்சத்திலேயே இது சாத்தியமாகும் எனத் தெரிவித்த அமைச்சர், நிர்வாக செயற்பாடுகளுக்காக மோட்டார் சைக்கிள் ஒன்று பெற்றுத்தரப்படுமெனவும் வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏசந்திரசிறி அவர்களுடன் இணைந்து பங்களிப்புச் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

முன்பதாக தலைமைக் காரியாலய வளாகத்தில் அமைந்துள்ள வைரவர் கோயிலுக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி உள்ளிட்டோர் சிறப்பு பூசைவழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர், சாரதிப் பயிற்சிக் கூடங்களை நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

நினைவுக்கல்லினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திரைநீக்கம செய்து வைத்ததைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் பிரதான பிராந்திய முகாமையாளர் திரு.கேதீசன் தலைமையில் நடைபெற்றன.

அங்கு வடமாகாண ஆளுநர் ஜீஏ சந்திரசிறி உரையாற்றும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் பேரிலேயே சாரதிப் பயிற்சிப் பாடசாலை திறக்கப்படுவதாகவும், இதன் மூலம் இப்பகுதியிலுள்ள பலரும் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகத்திற்குத் தண்டம் விதிப்பு

(பூநகரி)

கிளிநொச்சி புன்னைநீராவியடிப் பகுதியில் சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத நிலையில் இயங்கிவந்த உணவகம் ஒன்றிற்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டப்பணம் அறவிடப்ப[illegible]ள்ளது.

குறித்த [illegible]தியில் சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத நிலையில் உணவு தயாரித்ததுடன் காலாவதியான உணவுப் பொருட்கள் மற்றும் மென்பானங்களை விற்பனைக்கு வைத்திருந்த குறித்த உணவக உரிமையாளரை சுகாதாரப் பரிசோதகர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் கடந்த 05 ஆம் திகதி ஆஜர்படுத்தினர்.

குறித்த நபருக்கு எதிராக இரண்டு வழக்குகள் தொடரப்பட்ட நிலையில் இரு வழக்குகளையும் விசாரித்த நீதிமன்ற நீதிபதி, இரு வழக்குகளுக்கும் தலா 1500 ரூபா வீதம் 3 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறும் அத்துடன் சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய உணவகம் அமைக்கப்பட வேண்டும் என்றும் மேலும் அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே உணவகத்தைத் திறக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (112)

## சளி அடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

சளி நோய் காரணமாக நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒரு வயதுக் குழந்தை ஒன்று சளி அடைப்பு ஏற்பட்டு மரணமானது.

வேலணையைச் சேர்ந்த விஜிதராஜ் விதுசன் (வயது -1) என்ற குழந்தையே இவ்வாறு மரணமாகியது என யாழ்.வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## சிறுபோக நெற்செய்கையை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

### விவசாயிகள் கவலை

(முரசுமோட்டை)


கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறுபோக நெற்செய்கையினைக் கட்டாக்காலி கால்நடைகள் நாசம் செய்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இச் சிறுபோக நெற்செய்கை கால நடைகளினால் அழிக்கப்படுவதைத் தடுக்கும் முகமாக கால்நடைகளை வளர்ப்போர் அவற்றைக் கட்டுப்படுத்தும் திகதி அறிவிக்கப்பட்ட நிலையிலும் கால்நடை பண்ணையாளர்கள் அவற்றைக் கட்டுப்படுத்தி வளர்ககாத நிலையில், அவை இரவு மற்றும் பகல் வேளைகளிலும் வயல் நிலங்களுக்குச் சென்று அவற்றை அழித்து வருகின்றன.

இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கால்நடைப் பண்ணையாளர்கள் கவனம் எடுத்துகால் நடைகளைக் கட்டுப்படுத்தி நெற் செய்கையைப் பாதுகாக்க வழி வகை செய்ய வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கேட்டுக்கொளகின்றனர். (110)

## குடமுருட்டிப் பாலத்தை திறக்க ஏற்பாடு



(பூநகரி)

பூநகரியையும் கிளிநொச்சியையும் பிரிக்கும் பூநகரியில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குடமுருட்டிப் பால வேலைக்குரிய நிதி ஒதுக்கப்பட்டு, 2008ஆம் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டு, போர் நடவடிக்கையினால் இடைநிறுத்தப்பட்டது.

பல கோடிக்கணக்கான செலவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட வேலை முடிவுற்றுள்ளது. விரைவில் திறக்கப்படவுள்ள பிரமாண்டமான பாலத்தைப் படத்தில் காணலாம். (112)

## திவ்ய மஹோற்சவம்

(பூநகரி)

சரித்திரப் பிரசித்தி பெற்ற பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கேதீஸ்வர ஆலய திவ்ய மகோற்சவப் பெரு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஆலய வசந்த மண்டப அலங்கார தீபாராதனை நடைபெற்றுப் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா வந்து கேதீஸ்வரப் பெருமான் அடியார்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.

தொடர்ந்து 16ஆம் திகதி திங்கட்கிழமை திருத்தலப் பெருவிழாவும், 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாலாவித் தீர்த்தப் பெருவிழாவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## மே மாத ஓய்வூதியம்


(வடமராட்சி)

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மே மாத ஓய்வூதியம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளது.

இவ்வோய்வூதியம் பெறுவர்களுக்கான பற்றுச்சீட்டுக்கள் பிரதேச செயலகளிங்களிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (100)

# அவசரகாலச்சட்டத்தை மாத்திரமல்ல மக்களின் நெருக்கடிநிலைகளையும் நீக்கப் பாடுபடுவோம்

## அவசரகாலச் சட்டநீடிப்பு விவாதத்தில் சந்திரகுமார் எம்.பி



நாம் ஒருபோதுமே அவசரகாலச் சட்டத்தை விரும்பியதில்லை. ஆனால், இதுவரை நாட்டில்நிலவியிருந்த சூழல் அவசரகாலச் சட்ட நீடிப்பை ஏதோ ஒரு வகையில் அனுமதித்திருக்கிறது.

அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான எமது தெளிவான நிலைப்பாட்டை நாம் பலதடவை இந்தமன்றில் தெளிவுபடுத்தி இருக்கிறோம். முழுமையான அமைதியும், நிறைவான ஜனநாயக மலர்ச்சியும் ஏற்படும்போது அவசரகாலச் சட்டம்என்பதே இல்லாமல் போய்விடும். இந்த இரண்டு முக்கிய விடயங்களும் வளர்ச்சியடையும் போது அவசரகாலச் சட்ட நீடிப்புக்கே அவசியமற்று விடும் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளோம் என்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசர காலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர், மேலும் தெரிவிக்கையில்:

முழுமையான அமைதிக்கும் நிறைவான ஜனநாயத்துக்குமாக நாம் அனைவரும் கட்சிபேதங்களுக்கு அப்பால், சிந்திக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். அமைதிக்கு எதிராகச் சிந்தித்துக் கொண்டு அவசர காலச் சட்டத்தை நீக்குவதைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. இதனை இந்த மன்றிலே மீண்டும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக எமது கட்சியாகிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தன்னுடைய நிலைப்பாட்டை கடந்த வாரம் அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போதும் தெளிவாக விளக்கியுள்ளது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தினால், அவசரகாலச் சட்டத்தை விரைவில் நீக்குவதற்கான காலவரையறை ஒன்றை வகுத்துச் செயற்படுவது அவசியம் என்பதே எமதுகோரிக்கையாகும். இதுவே நடைமுறைச் சாத்தியமானது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதுடன் நீண்டகாலமாக அரசியல் காரணங்களுக்காகச் சிறைகளிலும், புனர்வாழ்வு முகாம்களிலும் இருக்கும் அனைவரையும் விடுதலை செயய் வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றோம். இதேவேளை புனர்வாழ்வு முகாம்களில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அனைவரும் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படுவர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதை நாம் வரவேற்கின்றோம். முடிந்தால் இந்த விடுதலையை இன்னும் விரைவுபடுத்தினால் நல்லதுஎன்று கருதுகின்றோம். இதுவரையில் 6528 (ஆறாயிரத்து ஐந்நூற்று இருபத்து எட்டு) பேர்விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 4092 (நான்காயிரத்து தொண்ணூற்று இரண்டு) பேர் மட்டுமே விடுதலை செய்யப்படவுள்ளனர் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இவர்களில் மேலும் 500 பேர் அடுத்து வருகின்ற 'வெசாக்' பண்டிகைக் காலத்தில் விடுவிக்கப்படவுள்ளதாகவும அறியமுடிகிறது.

முக்கியமாக சிவில் நடைமுறைகள் தொடர்பாக மக்களுக்கு ஏற்படவேண்டிய அறிவும், ஒழுங்குகளும் வளர்த்தெடுக்கப்படவேண்டியுள்ளது. அத்துடன் காணி விவகாரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல், வளங்களைப் பேணுதல் சட்டநடைமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான நடைமுறைகளை உருவாக்க வேண்டியிருக்கின்றது. இதைவிட போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்திக்க வேண்டிய அவசியமும் அங்கே உள்ளது.ஆயிரக்கணக்கானவர்கள் போரின் காரணமாக உடல் உறுப்புக்களை இழந்திருக்கின்றனர். இவர்களில் சிறு குழந்தைகள் முதல் பெண்கள், மாணவர்கள், உழைப்பாளிகள். முதியோர்கள் எனப் பலவகையிலும் அடங்குகின்றனர்.

ஆகவே, இவர்களைப் பராமரிப்பதற்கும், இவர்களுக்கான நிரந்தர உதவிக்குமாக ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இதைவிட, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியற் கைதிகளின் விபரங்களை அவர்களுடைய பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அத்துடன் அவ்வாறானவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அதை விரைவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், வடக்குக் கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல அவசர உதவிப் பணிகளுக்கு புலம் பெயர்ந்திருக்கும் மக்களிடமிருந்து பங்களிப்புக்களைப் பெறவேண்டியுள்ளது. அதற்குரிய சூழல் ஒன்று மிக அவசியமாக உருவாக்கப்பட வேண்டும். இந்த மக்கள் இங்கே உள்ள தங்கள் நகரங்களை அபிவிருத்தி செய்ய விரும்புகிறார்கள். தங்கள் ஊர்களையும் தங்களுடைய உறவுகளையும் மேம்படுத்த விரும்புகிறாக்ள். இதற்கு புலம் பெயர்ந்த மக்கள் முதலீடுகளைச் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். மேலும் - கலாசார உறவுப் பரிவர்த்தனையை இலகுவாக மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

இந்தப் பிரதேசங்களில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது. பல ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வேலைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். போருக்குப் பின்னரான அமைதிக்காலத்தில், போரை வெற்றிகொண்ட அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு மக்கள் இருக்கின்றனர்.

மக்களின் நம்பிக்கைகளைப் பாதுகாப்பதென்பது மிகவும் அவசியமானது. இன்று நாம் செய்யவேண்டிய மிக முக்கியமான கடமையாகவும் இதனையே நான் கருதுகிறேன். போர்க் காலத்திற்கும் போருக்குப் பின்னான காலத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் தெரிய வேண்டும். இந்த வித்தியாசத்தை உணர வைப்பதில் நாம் முக்கியமான பங்களிக்க வேண்டும். அதற்கான திட்டமிடலும் செயற்பாடும் அவசியமானது என்பதே நான் இங்கே கவனப்படுத்தும் சங்கதியாகும். நாம் கடந்த காலத்தில் அரசிடம் வலியுறுத்தி வந்த விடயங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இந்த மன்றிலே தெரியப்படுத்துகின்றேன். அதற்காக நாம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் படைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முக்கியமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தமையும், புனர்வாழ்வு முகாமிலிருக்கும் முன்னாள் புலிகள் உறுப்பினர்களை விடுவிப்பதையும் நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்தினோம். எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் அதை நிறைவேற்றி வந்துள்ளது. அரசாங்கத்தின்இந்த நடவடிக்கையானது தமிழ் மக்களிடத்தில் நல்லதொரு புரிதலை ஏற்படுத்தி உள்ளது.அபிவிருத்தியை நோக்கியும் அமைதியை நோக்கியும் முன்னேறிச் செல்லும் எமது நாட்டை நாம்மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டுமானால், எமது வளர்ச்சிக்கும் அமைதிக்கும் தடையாக இருக்கின்ற காரணிகளை நாம் இனங்கண்டு நீக்க வேண்டும். இதில் முக்கியமானது இனமுரண்பாடாகும். இன்று உலகில் பல்லின - பல்மத - பல்சமூக இணக்க நிலைமைகள் வலுப்பெற்று வருகின்றன.விட்டுக்கொடுப்பதும், சேர்ந்திருப்பதும், ஏற்றுக்கொள்வதும் சமமாக மதித்தலும் உயரிய ஜனநாயகநடைமுறைகளாக பின்பற்றப்படுகின்றன.

ஆகவே நாம் நடைமுறைகளுக்குச் சாத்தியமானவற்றைப் பற்றிச் சிந்திப்போம்.நீதியைப் பின்பற்றி, அமைதியை உருவாக்குவதற்கு முயற்சிப்போம்.

அவசரகாலச் சட்டத்தை மட்டுமல்ல, இந்த நாட்டிலே மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு நெருக்கடியைத்தருகின்ற அனைத்து விவகாரங்களையும் நீக்குவோம்.இதற்கு அனைவருடைய பங்களிப்பையும் எதிர்பார்த்திருக்கிறது இந்த நாடு. வவுனியா நகரசபை விவகாரம் தொடர்பாக இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவரவிரும்புகின்றேன். வவுனியா நகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் திரு சுரேந்திரன் நகரசபைச் செயலர் வசந்தகுமாரை அவமதித்தமைக்கு எதிராக நகர சபைப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இந்தப் பணிப்புறக்ணிப்பு காலவரையறையற்ற வகையில் நடைபெறுகிறது. இந்தப் பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதைப் பற்றியோ இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருக்கும் திரு சுரேந்திரன் மீது நடவடிக்கை எடுப்பதையோ கூட்டமைப்பின் தலைமைப்பீடம் அக்கறை காட்டவில்லை என வவுனியா நகரசபைப் பணியாளர்களும் மக்களும்தெரிவிக்கின்றனர். கடந்த 28.04.2011 அன்று வவுனியா வேப்பங்குளப்பகுதியில் U.N.D.P யின் அனுசரணையுடன்பிளாஸ்ரிக் கழிவுகளைப் பயன்படுத்தி மீள்சுழற்சிப் பொருட்களை ஆரம்பிக்கும் பொது நிகழ்வில் பலருக்கு முன்னிலையில் நகரசபைச் செயலாளரை திரு சுரேந்திரன் அவமதித்திருக்கிறார். அங்கே செயலரை அவர் தகாத வார்த்தைகளால் ஏசியும் மிரட்டியும் தகாத முறையில் நடந்துள்ளார். இதற்கு முன்னரும் பல தடவைகள் திரு சுரேந்திரன் செயலாளரை மிரட்டியிருக்கிறார் அவமதித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இவர் ஏனைய பணியாளர்களுடன் இவ்வாறே நடந்துவருகிறார். இந்த நபருடைய அடாவடித்தனங்கள் தொடர்பாக பல பணியாளர்களும் செயலாளரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், முக்கிய கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராஜாவிடமும் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், இவர்கள் எவரும் இதுவரையில் இந்தப் பிரச்சினை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேவேளை கடந்த ஒன்றரை ஆண்டுக்கும் மேலாக வவுனியா நகரசபை நிர்வாகம் மிகச் சீரழிந்த நிலையிலேயே உள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக இந்தச் சபைக்கான முதல்வரே நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் நகரசபையின் அபிவிருத்தி உட்பட மக்களுக்கான அவசியப் பணிகள் அனைத்தும் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன. இப்போது நகரசபைப் பணியாளர்களின் பணிப் புறக்கணிப்பினால், வவுனியா நகரம் சுகாதாரச் சீர்கேடுகளாலும் பிறசேவை நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது.

நகரசபையைக் கைப்பற்றுவதில் இருந்த நாட்டம், அதை ஒழுங்காக இயங்க வைப்பதில் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது. செயற்றிறனும் மக்கள் நலனில் அக்கறையும் இல்லாமையே இந்த நிலைக்குக் காரணமாகும். என்று தெரிவித்தார்.

## என்றிப் திட்டத்தின் கீழ் கனகாம்பிகைக் குளம் புனரமைப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கனகாம்பிகைக் குளம் என்றிப் திட்டத்தின் கீழ் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த வருடம் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப்புனரமைப்பு வேலைகளில் 40 வீத வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் குளத்தின் கீழான நீர்ப்பாசன வாய்க்கால் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (110)

## விற்பனை நிலையம் மூடப்பட்டதால் பாவனையாளர்கள் அசௌகரியம்

(அச்சுவேலி)

உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் அண்மைக் காலத்தில் நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் திறந்து வைக்கப்பட்ட விற்பனைக் கிளை நிலையம் சில மாதங்களின் பின்பு மூடப்பட்டுள்ளதாகவும் அதனால் அப்பகுதி மக்கள் அனுபவித்துவரும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பொதுமக்கள் வழங்கிய புகாரை அடுத்து அதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுப்பதாக மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடுவதாகவும் செல்வபுரம் மக்கள் நேரில் சந்தித்து மூடப்பட்ட கிளை தொடர்பாகக் கலந்துரையாடுவதாகவும் செல்லபுரம் மக்களை நேரில் சந்தித்து மூடப்பட்ட கிளை தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் அம் மக்களுக்கு உறுதி வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் பழம்வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் இன்றைய தினம் முற்பகல் 9.30 மணிக்கு சங்காபிசேகம் இடம்பெற்று வைரவர் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

# நுணுவில, வீரவல வலைத் தொழிற்சாலைகளை வடகடல் நிறுவனம் பொறுப்பேற்கவுள்ளது

## வடகடல் நிறுவனத் தலைவர் தகவல்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வரும் நுணுவில மற்றும் வீரவில பகுதிகளில் அமைந்துள்ள வலை உற்பத்தித் தொழிற்சாலைகள் விரைவில் வட கடல் நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்படவுள்ளதாக வடகடல் நிறுவனத்தின் தலைவர் எஸ்.ஏ.பரந்தாமன் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியினை நாடாளுமன்றம் அண்மையில் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். குருநகர்ப்பகுதியில் இயங்கி வரும் வடகடல் நிறுவனம் ஓர் அரச நிறுவனமாகும். ஏற்கனவே 1968 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இது சீநோர் எனும் பெயரில் செயற்பட்டு வந்தது. அந்தக் காலப்பகுதியில் படகு கட்டுதல், வலை தயாரித்தல், ஐஸ் உற்பத்தி முதலிய துறைகளில் இந் நிறுவனம் சிறந்து விளங்கியது.

இப்பணிகளில் சுமார் 1200 தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாகப் பாரிய அழிவுகளைச் சந்தித்த இந்நிறுவனம் 2000 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டுடன் சீநோர் என்றிருந்த இந் நிறுவனத்தின் பெயர் வட கடல் நிறுவனமெனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அங்கு எஞ்சியிருந்த இயந்திர உபகரணங்களைக் கொண்டு அதன் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டு வரும் இந் நிறுவனம் தற்போது வலை உற்பத்தியை மட்டுமே மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து 152 மில்லியன் ரூபா நிதி கிடைக்கவுள்ளது.

இந்நிதி கிடைக்கும் பட்சத்தில் தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களில் மேலும் ஒரு மடங்கான 68 வரையான ஊழியர்களைப் பணிக்கமர்த்தி, நிறுவனத்தை வளப்படுத்த முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்நிறுவனத்தின் வலைத் தொழிற்சாலையில் வலை விற்பனை நிலையம் ஒன்றினை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, சில்லறையாக விற்பனை செய்வதற்காகத் திறந்து வைத்துள்ளோம் எனவும் தெரிவித்தார். (பா)

### குப்பைக் கழிவுகள் கொட்டப்படுகின்றன

(கோப்பாய்)

செம்மணி இந்து மயான வளாகம் யூரோவில் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புல்டோசர் மூலம் துப்புரவு செய்யப்பட்ட மறுநாளே மயான வளாகத்தில் வாகனங்கள் மூலம் கழிவுக்குப்பைகள் போடப்பட்டமையை அடுத்து அப்பகுதி மக்களும், இந்து மயான சபையின் நிர்வாகத்தினரும் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இம் மயானம் பல்லாயிரக் கணக்கான செலவில் துப்புரவு செய்யப்பட்டபோதும் தொடர்ந்தும் குப்பைக் கழிவுகள் கொடடப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (08)

# தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

(கோப்பாய்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியினால் கடந்த வெள்ளிக்கிழமை தையல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நிலையத்தை கோப்பாய் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இப்பயிற்சி நிலையத்தில் இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து யுவதிகள் பயிற்சிபெற இணைக்கப்பட்டுள்ளதாக இருபாலை தெற்கு கிராம சேவையாளர் எஸ்.ஜெயந்திரன் தெரிவித்துள்ளார். (08)

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்குரிய அரச காணிக்கு உறுதி வழங்க நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட அரச காணிகளுக்கு உறுதி வழங்குவதற்கான நடவடிக்கை கடந்த 2 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட காணி நிர்வாக திணைக்கள உதவிக் காணி ஆணையாளர் மகேஸ்வர சர்மா தலைமையில் காணி உத்தியோகத்தர்களான ஸ்ரீரங்கநாதன், சந்திரதேவா உட்பட 17 பேர் கொண்ட குழுவினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் அப்பகுதியிலுள்ள காணி உரிமையாளர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், காணியின் நாற்புற எல்லைகள் தொடர்பான விபரங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (38)

# யுனெப் நிறுவனத்தினால் கூடாரங்கள் அன்பளிப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் மீளக்குடியேறிய மக்களுக்கு யுனெப் நிறுவனத்தால் தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த கிராமத்தில் 750 வரையான குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளன. இதில் 186 குடும்பங்கள் நிரந்தர காணிகள் இன்றி தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இக்குடும்பங்களில் வீடுகள் அற்ற 300 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு யுனெப் நிறுவனத்தால் முதற்கட்டமாக 175 தற்காலிகக் கூடாரங்களும், இரண்டாம் கட்டமாக 125 கூடாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. (110)

# மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பு

(முரசுமோட்டை)

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எந்த அபிவிருத்தி வசதிகளும் முன்னெடுககப் படாது இருந்த மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் தற்போது பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மின்சார விநியோகமும் வழங்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் -

இப்பிரதேசம் 14 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டதாகக் காணப்படுவதுடன், இக்கிராமங்களில் எந்தவித அபிவிருத்திப் பணிகளோ மின்விநியோக நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படாமல் கடந்த 30 வருடங்களாக இடம்பெற்று வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, தற்போது இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இப்பிரதேசத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின் விநியோகம் வழங்கப்பட்டது.

இதேவேளை, நெர்ப் திட்டத்தின் கீழ் யு.என்.கபிரட் நிறுவனத்தின் மூலமும் 300 நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பிரதேசத்தில் என்றிப் திட்டத்தின் கீழ் பல வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த 14 கிராம சேவையாளர் பிரிவுகளும் 7 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற்கட்டமாக 18 வீதிகள் தெரிவு செயயப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த பல வருடங்களாக திருத்தப்படாது மிகவும் மோசமாகச் சேதமடைந்த நிலையில் இருந்த இவ்வீதிகள் மக்களின் போக்குவரத்து தேவைகளைக் கருத்திற் கொண்டே இந்நிறுவனத்தினால் இவ்வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)



சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளராக புதிதாக நியமிக்கப்பட்ட கொ.ஜக்சீல் அவர்களை நகராட்சிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைக் காணலாம். (11)

# இலட்சினை வழங்கப்பட்டது

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்குக் கொழும்பு மத்தியஸ்த ஆணைக்குழுவினால் இலட்சினைச் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான இலட்சினைகளை கோப்பாய்ப் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் சி.மயில்வாகனம் வழங்கினார். (08)

# புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் மாதாந்த ஒன்றுகூடல் அண்மையில் எம்.யூ.தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இதில் 2001 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன்படி ஏ.எம்.ஜமால் தலைவராகவும், அவ்ஷெக் அஸ்மி ஐயூப் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் செயலாளரின் கீழ் 3 குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. (10)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(08.05.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

கர வருஷம்

சித்திரை 25 ஆம் நாள்.

நட்சத்திரம் திருவாதிரை மு.ப. 8.03 வரை

திதி: பஞ்சமி பி.ப. 2.03 வரை

சித்தம் அக்கினி நாள் ஆரம்பம்.

ராகுகாலம் 4.25 –533

சுபநேரம் : 8.55 –10.25

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, கடின உழைப்பு, மன மகிழ்ச்சி, நிம்மதி.

**ரிஷபம்:–** மனச் சஞ்சலம், கலகம், கவலை, மனக்குழப்பம்.

**மிதுனம் :–** மன மகிழ்ச்சி, பணவரவு, நண்பர் உதவி.

**கடகம்:–** கவலை, கலகம், கடின உழைப்பு, மனச் சஞ்சலம்.

**சிம்மம்:–** அதிக செலவு, நண்பர் சேர்க்கை, கவலை, கலகம்.

**கன்னி :–** பண வரவு, மன நிம்மதி, குழப்பம், அமைதி.

**துலாம் :–** வீண் செலவு, திருடர் பயம், மனச் சஞ்சலம்.

**விருச்சிகம்:–** பண வரவு, கவலை, மனச் சஞ்சலம்.

**தனுசு:–** வீண் ஆசை, பண வரவு, கவலை, மன மகிழ்ச்சி.

**மகரம்:–** வீண் விரயம், பணச் செலவு, மனச் சஞ்சலம்.

**கும்பம் :–** அதிக செலவு, மன மகிழ்ச்சி, பண அதிர்ஷ்டம்.

**மீனம்:–** வீணான பயம், தலைமைப் பொறுப்பு, கவலை, நிம்மதியின்மை.

# சிறையிலிருந்து கப்பம் அறவிட்டுவந்த கைதிகளின் வங்கிக்கணக்கு பரிசோதனை



(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைக்குள்ளிருந்தபடியே கப்பம் அறவிடும் செயற்பாடுகளை மேற்கொண்ட இரண்டு கைதிகளின் வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொலைபேசி வாயிலாக வர்த்தகர்களை மிரட்டி, கப்பமாக அறவிடப்படும் பணம் வைப்புச் செய்யப்படும் சந்தேகத்திற்கிடமான இரண்டு வங்கிக் கணக்குகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிசார் நீதிமன்றத்தின் உத்தரவை நாடியிருந்தனர்.

அதன்போதே பிரஸ்தாப வங்கிக் கணக்குகள் இரண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு கைதிகளுக்குரியவை என்பது தெரியவந்துள்ளது. சிறைச்சாலைக்குள்ளிருந்தபடியே அவர்கள் மொபைல் போன் ஊடாக கப்பம் அறவிடும் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் கொழும்பு நீதிமன்றத்தின் ஊடாக நேற்று இரகசியப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

# ஒசாமா போன்றே நிபுணர் குழு அறிக்கையும் கடலில் வீசப்பட்டுள்ளது என்கிறார் டி.யூ



(கொழும்பு)

அமெரிக்காவினால் ஒசாமா பின்லேடனின் உடல் கடலில் வீசப்பட்டது போல் இலங்கை தொடர்பான ஐ.நா.வின் நிபுணர்குழு அறிக்கையும் கடலில் வீசப்பட்டு விட்டதென அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை மீது ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை பல்வேறுபட்ட போர்க்குற்றச்சாட்டுக்களையும் தவறான முறையில் சுமத்தியிருந்த நிலையில் தற்போது பாகிஸ்தானில் நடந்த சம்பவம் இலங்கை மீதான சகல போர்க்குற்றச்சாட்டுக்களையும் துடைத்தெறிந்து விட்டது. ஒசாமா பின்லேடனின் உடல் அமெரிக்காவால் கடலில் வீசப்பட்டது. அதே போல் இலங்கை தொடர்பான ஐ.நா.அறிக்கையும் கடலில் வீசப்பட்டு விட்டது.

நிபுணர்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்த பின்னரே வெளியிட வேண்டுமென ஐ.நா.செயலாளர் நாயகம் தெரிவித்திருந்தார். ஆனால் அது மீளாய்வு செய்யப்படாமலே கசிய விடப்பட்டு இன்று உலகமறிந்த விடயமாகி விட்டது. இதனால் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்படுத்தப்பட்டது. அந்த அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருக்கும். முன்பே ஐ.நா விடம் இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் கேள்வியெழுப்பியுள்ளோம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# சுயலாப நோக்கை அடிப்படையாக வைத்தே புலம்பெயர் தமிழர்கள் செயற்படுகின்றனர்

## கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சுயலாபத்தை அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர் தமிழ் மக்கள், அரசாங்கத்தை எதிர்த்து வருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.**



இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஆஜர்படுத்தி தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணமே முட்டாள்தனமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்குச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தக் கூடிய தைரியம் யாருக்குக் காணப்படுகின்றது. எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

கீழ்த்தரமான பிரபலத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், நிதி திரட்டுவதற்காகவும் புலம்பெயர் தமிழர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். நிபுணர் குழு அறிக்கைக்கு பதிலளிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

குற்றச்சாட்டுகளுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து அவற்றை தெளிவுபடுத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பதவி மிகவும் கௌரவமிக்கது அவருக்கு எதிராக சேறு பூசும் செயற்பாடுகள் ஆரோக்கியமானதல்ல.

இவ்வாறான பிரச்சினைகளின் போது அரசாங்கம் மற்றும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் மட்டுமே பதிலளிக்க வேண்டும. துரதிஸ்டவசமாக அனைவரும் நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர் இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இலங்கைக்குப் பாதகமான சூழ்நிலையே ஏற்படும்.

கிளிநொச்சியை அரசாங்கம் கைப்பற்றிய போது அப்பாவிப் பொதுமக்களையும், எஞ்சிய போராளிகளையும் பாதுகாக்குமாறு நான பிரபாகரனிடம் கோரிக்கை விடுத்தேன். இந்தக் கோரிக்கைக்குப் பிரபாகரன் செவிசாய்க்கவில்லை. அப்பாவி பொதுமக்களை பாதுகாக்குமாறு தமிழ் அரசியல்வாதிகளிடமும் நான் கோரினேன்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு புலிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு மாறாக அநேகர் நிதி உதவிகளை வழங்கி யுத்தத்தை ஊக்கப்படுத்தினர்.

யுத்த முனைப்பினால் அப்பாவிபொதுமக்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுவதாக நான வலியுறுத்திய காரணத்தினால் என்னை தமிழ்த் துரோகி என பலர் அடையாளப்படுத்தினர்.

தமிழ் நாட்டில் நாள் தோறும் ஜனாதிபதியைக் கைது செய்யுமாறு கோரி போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எதைச் செய்ய முடியும் எதைச் செய்ய முடியாது என்பதனை தமிழக அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவளித்த அனைவரும் தற்போதைய நிலைமைகளுக்குப் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்ட வேண்டும்.

வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை முழுமையாக அகற்றிக் கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

புலிகள் மீள இயங்குவதற்கான சந்தர்ப்பம் கிடையாது. இதனால் இராணுவத்தினரை அரசாங்கம் அகற்றிக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தாய்லாந்து,ஜேர்மனுக்கு தூதுவர்கள் நியமனம்

தாய்லாந்து நாட்டுக்கான தூதுவராக முன்னாள் இராணுவத்தளபதியான லெப்டினனட் ஜெனரல் சாந்த கொட்டகொட ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஜேர்மன் நாட்டுக்கான இலங்கைத்தூதுவராக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான சரத் கோங் காஹகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், ரூபாவாஹினி யின் 'ஐ' தமிழ் அலை வரிசையில் செய்தி வாசிக்கும் தமிழ்ப் பெண்கள் குங்குமமோ பொட்டோ வைக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தவராவார்.

ஜேர்மன் நாட்டின் தூதுவராக கடமையாற்றிய டீ.பி.மடுகெதர மற்றும் தாய்லாந்து தூதுவ்ராகக் கடமையாற்றிய ஜே.பி.திசாநாயக்க ஆகியோரின் பதவிக்காலம் முடிவுற்றதைத் தொடர்ந்து இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை முன்னாள் கடற்படைத் தளபதி திசர சமரசிங்கவின் அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் நியமனத்தை அவுஸ்ரேலிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

# தேர்தல் நடத்துவதில் சிக்கல் பவ்ரல் அமைப்பு விளக்கமளிப்பு

(கொழும்பு)

எஞ்சிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை எதிர்வரும் 30ம் திகதி நடத்துவதில் காணப்படும் தடைகள் தொடர்பாக பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு தெளிவுபடுத்தியுள்ளது

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்ரியவிற்கு இந்த தெளிவுப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த கலந்துரையாடலின் பின்னர் கருத்து வெளியிட்ட பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தேர்தலை நடத்துவதற்கு தடையாகவுள்ள சகல விடயங்கள் தொடர்பாகவும் தேர்தல்கள் ஆணையாளருக்கு விளக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுதவிர நீதிமன்ற, புத்த ஜயந்தி, உள்ளிட்ட விடயங்கள் காரணமாக தேர்தல்கள் நடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுவதாக தேர்தல்கள் திணைக்கள தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே மே மாதம் 31ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல்கள் நடத்தப்படுமாயின் தேர்தல் முறைமையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்ரியவிற்கு பவ்ரல அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெளிவுப்படுத்தியுள்ளார்.

# ஆதிவாசிகளின் தலைவருக்கும் ஊடகப்பேச்சாளர் நியமனம்



(கொழும்பு)

மஹியங்கனை தம்பானை ஆதிவாசிகளின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோவிற்கு ஊடகப் பேச்சாள.ர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேடுவர் இனத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் போன்ற சகலவற்றையும் ஊடகத்தின் மூலம் வெளிப்படுத்துவதற்கு ஊடகப்பேச்சாளரின் அவசியம் உணரப்பட்டதனாலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்பானையில் மட்டுமன்றி பிம்தென்ன, வெல்லஸ்ஸ, கிழக்குப் பகுதியில் மற்றும் மலைநாட்டு பிரதேசங்களிலும் ஆதிவாசிகள் வாழ்கின்றனர். எனவே எமது இனம் தொடர்பான அனைத்து தகவல்களையும் ஊடகப் பேச்சாளர் மூலம் வெளியிடவுள்ளோம்.

ஆதிவாசிகளின் பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை சரியான தீர்வு எட்டப்படவில்லை.

எனவே எமது ஊடகப்பேச்சாளர் மூலம் இதனை வெளிப்படுத்தவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தம்பான பிராந்திய ஒலிபரப்பின் அறிவிப்பாளரான சம்பத் சதுரங்க தென்னகோன் என்பவரே இவர்களின் ஊடகப்பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆதிவாசிக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான நியமனம் கடந்த 01ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

## பூப்பந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட மட்டப் பூப்பந்தாட்டப் போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நிறைவு பெற்றது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில், ஆண்கள் பிரிவில், முதலாமிடத்தை மனிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை சென் ஜோன்ஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில், முதலாமிடத்தை சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டித் தொடரில் முன்னணிப் பாடசாலைகள் பல கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (52)




## போதிய பாதுகாப்பு வழங்கினால் ஆட்ட நிர்ணயச் சதி அம்பலமாகும்

(கொழும்பு)



போதியளவு பாதுகாப்பு வழங்கினால் ஆட்ட நிர்ணய சதியுடன் தொடர்புடையவர்களின் பெயர் விபரங்களை ஹஷான் திலகரட்ன வெளியிடுவார் என அவரது மனைவி அப்சரி திலகரட்ன தெரிவித்துள்ளார்.

ஷானுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் போதியளவு பாதுகாப்பு வழங்கினால் தரவுகளை வெளியிடத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். சதியுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை அம்பலப்படுத்தினால் கொலை செய்வதாக ஏற்கனவே சிலர் அச்சுறுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு வழங்கப்பட்டால் தகவல்களை வழங்குவதில் எவ்வித சிக்கலும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 1992ஆம் ஆண்டு முதல் ஆட்ட நிர்ணய சதிகளுடன் இலங்கைக்கு தொடர்பு இருப்பதாக ஹஷான் திலகரட்ன குறிப்பிட்டிருந்தார்.

விளையாட்டு வீரர்களை விடவும் நிர்வாகத்தினர் அதிகம் இந்த மோசடியுடன் தொடர்பு பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஹஷான் திலகரட்ன இரண்டு வாக்குமூலங்களை அளித்துள்ளார்.

இந்த வாக்குமூலத்தில் கிரிக்கெட் சூதாட்டம் குறித்து கண்ணால் கண்ட சாட்சிகளையும் பொறுப்புக் கூறவேண்டிய நபர்களின் பெயர்களையும் வெளிப்படுத்த தான் தயார் என இலங்கையின் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் ஹசான் திலகரட்ன தெரிவித்துள்ளார்.

## கால்பந்து தொடர் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டுக்குழுத் தலைவர் ஆ. இராஜேந்திரன் தெரிவித்தார். இதில் ஆண்களுக்கான போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

வயது அடிப்படையில் நடைபெறவுள்ள இப்போட்டியில், 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, 19 வயதுப் பெண்களுக்கான போட்டி வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைானத்தில் நடைபெறவுள்ளது. (52, கா)

## கட்டைக்காடு சென்மேரிஸ் வெற்றி

(வடமராட்சி கிழக்கு)

வத்திராயன் மத்தி விளையாட்டுக் கழகமும் வத்திராயன் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் வத்திராயன் மத்தி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் கட்டைக்காடு சென்மேரிஸ் அணியை எதிர்த்து உடுத்துறை செந்தாமரை அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதனையும் போட முடியாமல் போக, இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கட்டைக்காடு சென்மேரிஸ் அணி உடுத்துறை செந்தா மரை அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (38)

## வெளிவந்தது தரவரிசை

International Cricket Council

(டுபாய்)

ஒரு நாள் போட்டிகளில் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை நேற்று சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடர் நிறைவடைந்ததைத் தொடர்ந்தே இத்தரப்படுத்தல் வெளியிடப்பட்டது.

துடுப்பாட்டத்தில் முதலிரண்டு இடங்களிலும் தென்னாபிரிக்க அணியின் வீரர்களான வீரர் ஹஷிம் ஆம்லாவும், டிவில்லியர்ஸும் உள்ளனர். 3ஆவது இடத்தில் இலங்கையின் திலகரத்ன டில்சான் உள்ளார். இதில், இந்திய அணி வீரர்களான வீரர் விராட் ஹோலி 8ஆவது இடத்திலும், எம்.எஸ். டோனி 9ஆவது இடத்திலும், சச்சின் 10ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்தின் வெட்டோரி முதல் இடத்திலும், சிம்பாப்வேயின் ரே பிரைஸ் 2ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

சகலதுறை வீரர்கள் பட்டியலில் அவுஸ்ரேலியாவின் ஷேன் வாட்ன் முதல் இடத்திலும், பங்களாதேஷ் அணியின் ஹாகிப் அல் ஹசன் 2ஆவது இடத்திலும், பாகிஸ்தான் அப்ரிடி 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

## மகிழ்ச்சியில் மனைவி



(கொல்கத்தா)

நாங்கள் இப்போது மகிழ்ச்சியாக உள்ளோம். இதற்கு புனே அணிக்கு எமது வாழ்த்துக்கள் என டோனா கங்குலி தெரிவித்தார்.


[illegible]காவது ஐ.பி.எல். தொடரில் புனே அணிக்கான கங்குலி விளையாடுவது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது அவரது மனைவி டோனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவதை கங்குலி உண்மையிலேயே விரும்பினார். அந்த வாய்ப்பு புனே அணி நிர்வாகத்தினூடாகக் கிடைத்ததையிட்டு அவர்களுக்கு என் நன்றிகள்.

அவர் மீண்டும் ஐ.பி.எல். தொடர் ஆடுவதையிட்டு தற்போது நாங்கள் மகிழ்ச்சியாக உள்ளோம். ஏனென்றால் ஐ.பி.எல். போட்டியில் ஆடுவதை கங்குலி விரும்பினார். புனே வாரியர்ஸ் நிர்வாகம் அவரை அணுகியதும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார் என்றார்.

## எங்கிருந்தாலும் வாழ்க

(புதுடில்லி)



கங்குலி இல்லாவிட்டாலும் கொல்கத்தா அணி சிறப்பாக விளையாடி வருகிறது. கங்குலி எனக்குப் பிடித்தமான வீரர். அவர் புனே அணிக்காகச் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவிக்க எனது வாழ்த்துகள் என கொல்கத்தா அணியின் உரிமையாளர் ஷாரூக்கான் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொல்கத்தா அணியின் உரிமையாளர் நடிகர் ஷாரூக்கான் டில்லியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கங்குலியை ஏன் ஏலத்தில் வாங்கவில்லை என்ற கேள்வி அடிக்கடி என்னிடம் கேட்கப்படுகிறது.

அணியின் வளர்ச்சிக்காக நாங்கள் வகுத்த திட்டங்களில் (ஆலோசகர் உள்ளிட்ட பணி) கங்குலியின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று விரும்பினோம்.

ஆனால் அந்த வாய்ப்பை அவர் விரும்பவில்லை. கங்குலி இல்லாவிட்டாலும் கொல்கத்தா அணி சிறப்பாக விளையாடி வருகிறது. கங்குலி எனக்குப் பிடித்தமான வீரர். அவர் புனே அணிக்காகச் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவிக்க எனது வாழ்த்துகள் என்றார்.

## யுனைடெட் முயற்சி



யுனைடெட் அணியில் ரொட்வெல்லை இணைக்க தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ரொட்வெல் அந்த அணியில் இடம் பெறக்கூடும் என்றும் செய்தி பரவியுள்ளன. இது குறித்து ரொட்வெல் கூறுகையில், வதந்திகள் குறித்து நான் அதிக கவனம் செலுத்துவது இல்லை.

குடிசன் பார்க்குடன் நான் மகிழ்ச்சியாகவே உள்ளேன் என்றார். அணி மாறுவதாகக் கூறப்படும் வதந்தியை மறப்பது கடினமாக இருக்கும் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. இந்த வதந்திகளை மனதின் ஓரத்தில் ஒதுக்கிவிடலாம்.

தற்போது நான் எவர்டன் கால்பந்து அணிக்காக ஆடி வருகிறேன். அந்த அணியுடன் எப்போதும் 100 சதவீதம் எனது பங்களிப்பை அளிப்பேன். நான் எவர்டன் கால்பந்து வீரராக தான் உள்ளேன். எவர்டன் அணிக்கு ஆடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த அணியில் இருப்பது எனக்கு மிகுந்த சந்தோகூஷத்தை அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.


## ஆலோசகர் அல்லது பயிற்சியாளர்

(ராஜஸ்தான்)

அடுத்து வரும் தொடர்களில் ராஜஸ்தான் அணியின் ஆலோசகராகவோ அல்லது பயிற்சியாளராகவோ கூட பணியாற்றலாம். அதற்கான வேளையும் ஏற்பட வாய்ப்புள்ளதென ஷேன் வோர்ன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ஐ.பி.எல். போட்டியில் நான் விளையாடும் கடைசி ஆண்டு இது தான். அடுத்த தொடரில் நான் விளையாடப் போவதில்லை. ராஜஸ்தான் ராயல்ஸ் அணி உள்ளூரில் விளையாடும் கடைசி இரண்டு ஆட்டங்களுக்கும் (சென்னை மற்றும் பெங்களூருக்கு எதிராக) எல்லோரும் முன்வந்து ஆதரவு அளிக்க வேண்டும். உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படுகிறது.

அடுத்த ஆண்டு எனது நிலை எப்படி இருக்கும் என்பது யாருக்குத் தெரியும். ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் அணியின் ஆலோசகராகவோ அல்லது பயிற்சியாளராகவோ கூட பணியாற்றலாம். தற்போது எனது கவனம் எல்லாம் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியைச் சிறப்பாகக் கொண்டு வர வேண்டும் என்பதில் தான் உள்ளது. எனக்கு ஆதரவு அளிக்கும் அணியின் வீரர்கள் அனைவருக்கும், ரசிகர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முதலாவது



ஐ.பி.எல். போட்டியில் இருந்த அதே வேகத்துடன் தான் நாங்கள் உள்ளோம். இந்தத் தொடரை உயர்ந்த நிலையில் முடிப்பதே சிறப்பானதாகும். இளம் வீரர்களை நாங்கள் மேம்படுத்திய விதம் குறித்து நான் பெருமை அடைகிறேன் என்றார்.

ஷேன் வோர்னின் இந்த முடிவு குறித்து முன்னாள் வீரர்கள், விமர்சகர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

நல்ல நேரத்தில் ஓய்வை அறிவித்திருப்பதாகவும், அவர் ராஜஸ்தான் அணியின் பயிற்சியாளராக வருவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாதிப்பு இல்லையாம்



(லண்டன்)

எமது அணிக்கெதிரான இந்திய அணியின் போட்டித் தொடர்களின் போது இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் டன்கனின் பாதிப்பு எதுவும் இருக்க வாய்ப்பில்லை என இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: 2000ஆம் ஆண்டில் டங்கன் பிளெட்சரின் காலத்தில் நானும் அணியில் இருந்தேன். ஆனால், இருவருக்கும் சுமுகமான உறவு இருக்கவில்லை.

எமது அணியின் ஒரு சில வீரர்கள் பற்றியே ஓரளவு அவருக்குத் தெரியும். தற்போதுள்ள புதிய வீரர்கள் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. அநேகமாக ஜொனதன் டிரொட், ஸ்ரீபன் பின், ஸ்ருவோட் புரோட், ரிம் புரெஸ்னன் உள்ளிட்டோர் அவரின் பயிற்சியாளர் ஒப்பந்தம் நிறைவடைந்த பின்னரே பிரபல்யம் பெற்றனர். எனவே, இந்திய அணியின் தொடர்களின்போது எமக்கெதிரான அவரின் யுக்திகள் பெரியளவில் எமக்குப் பாதகமாக அமையும் என நான் நினைக்கவில்லை. இத்தொடரின் ஜேம்ஸ் அன்டர்சன் இந்திய அணிக்குப் பெரும் தலைபிடியாக இருப்பார் என்று நான் எதிர்பார்க்கின்றேன் என்றார்.

# உலகில் அதிகரிக்கும் வெப்பம் காரணமாகவே சுனாமி, நிலநடுக்கம் அழிவுகள் ஏற்படுகின்றன

## ஜப்பானிய பெண் விஞ்ஞானி தெரிவிப்பு

உலக வெப்பமயமாதல் நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் சுனாமி, நிலநடுக்கம் ஏற்பட்டு மனித உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன என்று ஜப்பான் நாட்டு பெண் விஞ்ஞானி கூறினார்.

மேட்டுப்பாளையம் தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழக வனக்கல்லூரி மற்றும் ஆராயச்சி நிலையத்தில், வனச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை மிதப்படுத்துதல் பற்றிய ஒருநாள் கருத்தாய்வை நடத்தியது.

கருத்தாய்வில், கனடா நாட்டைச் சேர்ந்த சர்வதேச விஞ்ஞானி ஆன்ட்ரு கோடன் கூறியதாவது -

உலகில் கனடாவில் வன வளம் அதிகமாக உள்ளது. கனடா வன வளங்களைப் பாதுகாப்பதில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதன் காரணமாக சுற்றுச்சூழல் சிறபபான முறையில் அமைந்து நிலவளம், நீர்வளம் பாதுகாக்கப்படுகிறது.

வனவளங்களை பாதுகாக்கவும், உலக வெப்பமயமாதலை தடுக்கவும் நிறைய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதுபற்றிய ஆராய்ச்சிகளை இந்தியாவில் மேற்கொள்ள, மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது என்றார்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சர்வதேச விஞ்ஞானியும், ரெயின்போ குழந்தைகள் வன கூட்டுக்குழு அமைப்பின் தலைவருமான எமிகா காமினோமொரி கூறியதாவது: இன்று உலகவெப்பமய மாதலை தடுபபதின் மூலம், வனவளங்கள் மறறும் மனித உயிர்கள் காப்பாற்றப்படும். வனச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை மிதப் படுத்துதல் பற்றிய விழிப்புணர்வை, இன்றைய தலைமுறையினரான குழந்தைகள் இடையே ஏற்படுத்த வேண்டும். ரெயின்போ அமைப்பு 9 நாடுகளில் இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

உலக வெப்பமயமாதல் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால் சுனாமி, நிலநடுக்கம் ஆகியவை ஏற்பட்டு மனித உயிர்இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. உலக வெபபமயமாதலை தடுக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம் என்றார்.

# உலகம் அழியும் திகதி மே 21 என விளம்பரம்

(கனடா)

உலகம் இந்த மே மாதம் 21ஆம் திகதி அழியப் போவதாக கனடாவின் 17 நகரங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

உலகம் இந்த மே மாதம் 21ம் திகதி அழியப் போவதாக கனடாவின் 17 நகரங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. மைக்கேல் கார்சியா என்பவர் பேமிலி ரேடியோ நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் சார்பில் உலகம் அழியப் போவதாக ரொரண்டோ, கால்கரி, கிங்ஸ்டன், விண்ட்சர், சாஸக்டூன், ஒட்டாவா, கியூபெக், மொன்றியல் உட் பட 17 நகரங்களில் விளம்பரப்




பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

உலகம் அழியப் போவதாக நம்பும் தமது ரேடியோ நேயர்கள் ஆயிரக்கணக்கில் அமெரிக்கா, ஈராக், துருக்கி, லெப ரைன் ஆகிய நாடுகளில் இருப்பதாகவும் கார்சியா தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் கார வான் வண்டி மூலம் கால்கரி, வான் கூவரில் பிரசாரம் செய்யப்படும் என்றும் நிறுவனத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குயின் பல்கலைக்கழகததில் பிரபஞ்ச பேரழிவு குறித்து பாடம் நடத்தும் ரிச்சர்டு அஸ்கோ கூறுகையில், உலகம் அழியப் போவதாக கூறும் இந்தத் தகவல முதல் முறையாக வெளியாகவில்லை. இந்த அறிவிப்பு தான் கடைசி அறிவிப்பு என்றும் கூறமுடியாது என்றார்.

மரணத்திற்கு பின்னர் ஒரு நிகழ்வு உள்ளது என நம்பும் மக்கள் உலகம் அழியும் என்ற தகவல் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். கடந்த 1994 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6 ஆம் திகதி உலகம் அழியும் என மதபோதகர்கள் எச்சரித்து இருந்தனர். அன்றைய தினம் மக்கள் பெரும் அரங்குகளில் திரண்டனர்.

அவர்கள் குறிப்பிட்டதைப் போல உலகம் பேரழிவைச் சந்திக்கவில்லை. அதுபோன்று மே 21 ஆம் திகதியும் ஒன்றும் நிகழாது. அடுத்த நாள் இது பற்றி பேசிய நபர்களிடம் விவாதிப்போம் என அறிவியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பத்தாவது அகவையில்



பெயர்: பிரேமரஞ்சன் துவாரகா
முகவரி: பத்தானை,
அளவெட்டி.




பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# உள்ளதைச் சொல்லுறேனுங்கோ...

## சிந்தித்துச் செயற்படுங்கள்

போனமாசம் 26 ஆம் திகதி உந்த ஐ.நா சபைக்காரர் ஓர் அறிக்கையொண்டு வெளியில விட்டவையல்லோ. கடவுளே! அந்த அறிக்கை வந்ததும் போதும், இஞ்சை இருக்கிறதுகள் பட்டபாடு! போதும் போதுமெண்டாகிப் போட்டுது.

அறிக்கை வெளியால வந்தவுடனை தெற்குப் பகுதிபட்ட அல்லோலகல்லோலம்... நினைச்சுப் பார்க்க உடம்பெல்லாம் சிலிர்க்குது பாருங்கோ. எல்லாரும் சேர்ந்து தங்கட இன ஒற்றுமையையும் நாட்டுப் பற்றையும் காட்டினதை நினைக்க எனக்கு எங்கட தலைமையளின்ர புடுங்குப்பாடுகளும், புதுவழி தேடுற சிந்தனையளும்தான் ஞாபகத்துக்கு வந்தது.

"அறிக்கையைத் திரும்பப் பெறு..." எண்டும், "தீக்குளிப்பேன்..." எண்டும் பெரும் முரசறைந்து மூர்க்கத்தனமாவல்லோ நடந்தவை. சரி! அதுகிடக்கட்டும். உந்த அறிக்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்? ஒரு சாரார் வரவேற்கினம். இன்னொரு சாரார் விரக்திப்படுகினம். வன்னிப் போரின் வதைப்புத் தெரியாததுகள் வரவேற்குதுகள். அந்தப் போருக்குள்ள வதைஞ்சு, சிதைஞ்சதுகள் விரக்திப் படுகுதுகள். வேண்டாமென்னுதுகள்.

அது ஏனெண்டாப் பாருங்கோ உந்தப் 'பானாக்கீனா'ன்ர அறிக்கையில பல விசயங்கள் வெளிப்படையாச் சொல்லப்பட்டிருக்குது பார்த்தனிங்களே?

அது என்னெண்டால், வன்னியில சண்டை நடக்கேக்கை புலியளின்ர பங்கு குறித்து ஒப்புக்கொள்ள உந்தப் புலம்பெயர்ந்த தமிழர்கள் மறுக்கிறதாகவும், போருக்குள்ள குஞ்சு குருமனுகளைப் புடிச்சு வைச்சிருந்தது. பிறகு ஆமியிட்டை போக வெளிக்கிட்ட சனத்தை சுட்டுச் சாக்காட்டினதெண்டு பட்டியல் நீளுது பாருங்கோவன்.

ஆனால் பாருங்கோ வன்னிச் சண்டேக்கை நடந்த இந்தப் பிரச்சினையள் குறிச்சு இந்தப் புலம்பெயர் தமிழர்கள் வாயைத் திறக்கினமில்லையெண்டும், பாதிக்கப்பட்ட சனத்தைவிட 'தமிழ்ஈழம்' எண்ட அரசியல் கோட்பாட்டைத்தான், அவையள் காப்பாத்த முனைஞ்சதாகவும் உந்தப் 'பானாக்கீனா'ன்ர அறிக்கை சொல்லுது.

இப்ப எங்கட சனம் அதுவும் போருக்குள்ள அம்பிட்ட சனம் ஏன் விரக்தியடைஞ்சிருக்கெண்டது தெரியுதே!

வன்னி வளைப்புக்குள்ளயிலிருந்து கொண்டு புலியள் தெருத்தெருவா, வீடுவீடா பொடி பொட்டையளைப் பிடிக்கேக்கையும், ஆமியிட்டை போக வெளிக்கிட்ட சனத்தை சுடேக்கையும் - கிபிரால, ஆட்டிலறியால குண்டுகளைப் போட்டுச் சீரழிக்கேக்கையும் வன்னிச் சனங்கள் கதறின கதறல் இருக்கே அது ஆருக்கேன் கேட்டதே?

"ஐயோ... எங்களைக் காப்பாத்துங்கோ... எங்களால தாங்கேலா தாம்... ஆமி ஷெல் அடிக்கிறான்... அநியாயமாய் சாகிறோம்... இயக்கம் எங்களை இருக்கவிடுதில்லை... இரவிரவாய் பிள்ளையளைப் பிடிக்குது... வெளிக்கிட்டு ஆமிட்டை போக விடுகிறாங்களில்லை. ஐயோ... எங்களைச் சுடுகிறாங்கள்... தின்னத்தீன் இல்லை... ஐயோ... காப்பாத்துங்கோ... ஆராவது ஓடிவாங்கோ..."

அந்தநேரம் வன்னிச் சனத்தின்ர சத்தமும், சாவொலியும் ஒருத்தருடைய காதிலையும் விழேல்லையே? அந்தச் சனத்தைக் காப்பாத்துறதுக்கு ஏன் ஒருத்தரும் முன்னுக்கு வரேல்லை? போரை முடிச்சு புலியளை ஒழிச்சாப் பிறகே உந்தப் 'பூனைக் கண்ணுகளுக்கு' எங்கட பொசுங்கிப் போன சீவியம் தெரியவருகுது?

இந்த இடத்தில தான் பாருங்கோ நாங்கள் ஆற அமர இருந்து அறிவுபூர்வமாகச் சிந்திக்கவேணும்.

பிரபாகரனையும், பிரபாகரன்ர இயக்கத்தையும் அவையளோடை இருந்த தமிழ் சனத்தையும்அழிக்கிறதுக்கு அரசுக்கு ஆயுதமும் ஆதரவும் கொடுத்தது இந்த மேற்குலகம்தான். இப்ப இதே மேற்குலகம் தான் பிரபாகரன் அழிஞ்சாப் பிறகு அரசோடை முரண்பட்டு நிற்கிறதை நாங்கள் தெளிவாப் புரிஞ்சு கொள்ளவேணும். அவையளின்ர நாடு சார்ந்த நலனுக்காகப் பிரபாகரனையம் அரசையும் பகடைக் காயளாகப் பயன்படுத்த வெளிக்கிடுகிறது பகிரங்கமாத் தெரியவருகுது.

உவேன்ர ஆட்டத்துக்கும் அநியாயத்துக்கும் எங்கட புலம்பெயர் தமிழ்க்கூட்டங்கள் இழுபட்டுக்கொண்டு போறது அவ்வளவு நல்லதுக்கு இல்லைக் கண்டியளே. கடைசியில உந்தக் கூட்டம் 'கறிவேப்பிலை' மாதிரித்தான் போகப் போகுதுகள். மேற்குலகத்தின்ர ஆதரவோடை உந்தக் கறிவேப்பிலைக் கூட்டங்கள் இனியும் அடிபாட்டு அரசியலை விரும்புறது விரும்பத்தக்க செயல் இல்லைக் கண்டியளே. ஏனென்டாப் பாருங்கோ உந்த அறிக்கை ஒண்டுக்கே அணி திரண்ட சிங்களக் கூட்டம் உவையளின்ர நாடுகடந்த தமிழீழம் அமைக்க நல்லாய்த்தான் விட்டிட்டு இருப்பினம் பாருங்கோ. சரி அது கிடக்கட்டும். இதுவொரு முக்கியமான விடயம்.


இஞ்சை போரில இழப்புக்களைச் சந்திச்ச சனத்துக்கு உந்தப் 'பானாக்கீனா'ன்ர அறிக்கை கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யுறமாதிரியிருக்குது. "ஆபத்து நேரத்தில எங்களை ஏனெண்டு கேட்கேல்லையாம்? இப்ப என்னத்துக்கு உதெல்லாம்? தங்கட நாட்டின்ர நலனுக்கு எங்கட பிரச்சினையை வைச்சுக்கொண்டே மகிந்தாவோடை மல்லுக்கட்ட வருகினம்..." எண்டு சனம் கேட்கத் தொடங்கியிட்டுது.

அதோடை பாருங்கோ ஒரு அறுதிப் பெரும்பான்மையோடை ஆட்சிக்கு வந்த மகிந்த சனாதிபதியின் கீழதான் இப்ப நாங்கள் இருக்கிறம். இந்த நிலையில புலம்பெயர்ந்து இருக்கிற உந்தப் கூட்டங்கள் இனி எங்களைக் கொஞ்சம் புரிஞ்சு நடக்கவேணும். நீங்கள் உங்கை ஆர்ப்பாட்டம் பண்ணினால், இஞ்சை அடி உதை வேண்டுறது நாங்கள் தான் எண்டதையும், தடுப்பில உள்ள உங்கட புலி உறுப்பினர்களையும், அகதி முகாம்களில இருக்கிற எங்கட வன்னிச் சனங்களையும் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேணும். நீங்கள் கொஞ்சம் கூட எங்களைப் பற்றிச் சிந்திக்காமல் நடந்து கொண்டால், உவர் 'பானாக்கீனா'ன்ர அறிக்கையில சொல்லியிருக்கிறமாதிரி **"போரின்போது பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதை விட, 'தமிழ்ஈழம்' என்ற அரசியல் கோட்பாட்டைக் காப்பாற்றவே புலம்பெயர் வாழ் தமிழர்கள் முன்னுரிமை அளிக்கிறார்கள்"** எண்டது உண்மையாப் போயிடும்.

அதோடை இன்னுமொண்டையும் நீங்கள் சிந்திக்கவேணும். நாங்கள் எல்லா வகையாலும் இப்ப நொந்து போய் இருக்கிறம். இனி எங்களைக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்க விடுங்கோ எண்டுதான் கேட்கிறம். நாங்கள் இழந்துபோய் நிற்கிறது கொஞ்சம் நஞ்சமல்ல. அதுக்காக வன்மம் தீர்க்க வெளிக்கிடுகிறது புத்திசாலித்தனமல்ல. இனி அறிவுபூர்வமாய் சிந்திச்சு ஆக வேண்டியதைப் பார்க்கவேணும். இல்லையெண்டு சொன்னா - **"புலம்பெயர் தமிழர்கள் புலிகளுக்கும் அதிதீவிரவாத தேசியத்துக்கும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியமை இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் 'எதிர்மறையான விளைவுகளை' ஏற்படுத்தியுள்ளது".**

இது இன்னும் நீடிச்சுக் கொண்டேதான்போகும் கண்டியளே!

*- சின்னக்குட்டி சின்னச்சாமி -*



தமிழக மீனவர்கள் 4 பேர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து தங்கச்சி மடத்தில் 5000 மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதைக் காணலாம்.

# பிணை மனுக்கோரிக்கையை நிராகரித்து கனிமொழியைக் கைது செய்ய வேண்டும்

## சி.பி.ஐ. நீதிமன்றில் வாதாட்டம்

(சென்னை)



2ஜி வழக்கு தொடர்பாக தம்மைக் கைது செய்யாமலிருக்க கனிமொழி எம்.பி. தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டு அவரை காவலில் வைக்க உத்தரவிட வேண்டும் என்று சிறப்பு நீதிமன்றத்தில் சிபிஜ சார்பில் வாதிடப்பட்டது.

இதனிடையே, கனிமொழியின் பிணை மனு மீதான உத்தரவு எதிர்வரும் மே 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2ஜி அலைக்கற்றை முறைகேடு தொடர்பாக தாங்கள் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக கனிமொழி, கலைஞர் ரி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமார் ஆகியோர் சார்பில் சிறப்பு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுவை சிறப்பு நீதிபதி ஓ.பி.சைனி நேற்று முன்தினம் விசாரித்தார். குற்றம்சாட்டப்பட்டவர்களின் வழக்கறிஞரும் நேற்று வாதிட்டனர். இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்றும் தொடர்ந்தது. விசாரணைக்கு ஆஜராவதற்காக கனிமொழி நேற்றுக் காலை 9.40 மணி அளவில் தமிழ்நாடு பவனில் இருந்து பாட்டியாலா வளாகத்துக்கு வந்தார்.


சிபிஜ சார்பில் வழக்கறிஞர் யூ.யூ.லலித் வாதிட்டார். கலைஞர் ரி.வி.யில் அதன் நிர்வாக இயக்குநர் சரத்குமாரைப் போலவே கனிமொழிக்கும் 20 சதவீத பங்குகள் இருக்கின்றன. கனிமொழி வெறும் பங்குதாரராக மட்டுமே இருந்தார் என்பதை ஏற்க முடியாது. கலைஞர் டி.வி.யின் நிர்வாகத்தில் கனிமொழி முக்கியப் பங்கு வகித்திருக்கிறார்.

வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் ஆ.ராசாவுக்கும் கனிமொழிக்கும் நெருக்கமான தொடர்பு இருந்திருக்கிறது. ராசாவுக்கு தொலைத் தொடர்புத் துறையைப் பெற்றுத் தருவதற்காக அரசியல் தரகர் நீரா ராடியா மூலமாக கனிமொழி பரிந்துரை செய்திருப்பது தெரியவந்திருக்கிறது.

கலைஞர் ரி.வி. தொடங்கப்படும்போது ராசாவுடன் கனிமொழி அடிக்கடி பேசியிருக்கிறார். இவற்றின் காரணமாக எந்த ஆவணமும் இல்லாமல் கலைஞர் டி.வி.க்கு பணம் கைமாறியிருக்கிறது.

கனிமொழி மீதான குற்றச்சாட்டுகளுக்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. அதனால் குற்றவியல் சட்டம் 88சியின் அவர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டு அவரைக் காவலில் வைக்க உத்தரவிட வேண்டும். வழக்கமான ஜாமீன் மனு தாக்கல் செய்ய மட்டுமே அவர் அனுமதிக்கப்பட வேண்டும் என்று சிபிஜ சார்பில் வாதிடப்பட்டது.

## நலமாக உள்ளார் ரஜினி மருத்துவர் கூறுகிறார்



(சென்னை)

காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நடிகர் ரஜினிகாந்தின் உடல்நிலை சீரடைந்து வருவதாக அவருக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் கிஷோர் கூறினார். ரஜினிகாந்தின் உடல்நலம் குறித்து அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் கிஷோர் கூறியதாவது: ரஜினிகாந்த் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போது இருமல், சளி மற்றும் காய்ச்சல் இருந்தது. எனவே அவரை தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்து சிகிச்சை அளித்தோம். தற்போது அவரது உடல் நிலை சீரடைந்து விட்டது. இருமல், சளி மற்றும் காய்ச்சல் உடனடி யாக குறைந்து விட்டது. அவர் டிஸ்சார்ஜ்' ஆகும் தகுதியுடன் உள்ளார். ஆனால் மேலும் 2 நாட்கள் ஓய்வில் இருக்க ரஜினிகாந்த் விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே பாது காப்பு கருதி தொடர்ந்து தீவிர சிகிச்சை பிரிவில் அவரை வைத்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பின்லேடனுக்காக விசேட தொழுகை-பரபரப்பு



அமெரிக்க படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒசாமா பின்லேடனுக்காக சென்னை அண்ணாசாலையில் உள்ள மக்கா மஸ்ஜித் இஸ்லாமிய மையத்தில் விஷேச தொழுகை (ஜனாஷா) நேற்று முன்தினம் பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது. இதில் இஸ்லாமியர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த தொழுகைக்கு பிறகு மக்கா மஸ்ஜித் இஸ்லாமிய மையத்தின் நிர்வாகிகள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:- அமெரிக்காவின் இரட்டை கோபுரம் தகர்ப்பு சம்பவத்திற்கு பின்லேடன் தான் காரணம் என்று அமெரிக்கா கூறி வந்தது. ஆனால் அதற்கான ஆதாரத்தை அமெரிக்கா வெளியிடவில்லை. இப்போது ஒசாமாவை கொன்று கடலில் வீசியிருக்கிறார்கள். இஸ்லாமிய முறைப்படி அவரை அடக்கம் செய்யவில்லை. அவர்கள் ஒசாமா பின்லேடனை நீதிக்கு முன்பு நிறுத்தியிருக்க வேண்டும். அதை விட்டு அவரை சுட்டுக்கொன்று இருப்பது எந்த விதத்தில் நியாயம்? அவர் அநாதை இல்லை. முஸ்லிம் சமுதாயத்தின் பங்கு. அவருக்காக இன்று ஜனாஷா தொழுகையை நடத்தியிருக்கிறோம். நாங்கள் தீவிரவாதத்தையும், பயங்கரவாதத்தையும் ஆதரிக்கவில்லை.


மெலிபன் பிஸ்கட் காட்சியகம்

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி கடந்த 07.03.2011 முதல்

Maliban

யாழ்.நகரில் இல.152 (348) ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் மெலிபன் காட்சியகத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏகவிநியோகஸ்தர்:
பெட்டா எசென்ஸ் சப்ளையர்ஸ்,
104, (298), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.




(C/500)

மெலிபன் பிஸ்கட் காட்சியகம்
152 (348), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில்
# இலங்கையில் அரிசி,மா விலை அதிகம்
## என்கிறது உலக உணவுத்திட்டம்

(கொழும்பு)

அரிசி, கோதுமை மாவிற்கான விலை இலங்கையில் மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய பிராந்திய வலயத்தில் ஒப்பீட்டளவில் இலங்கையில் அரிசி மற்றும் கோதுமை மாவிற்கான விலை உயர்வாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில் அரிசியின் விலை 30 வீதத்தினாலும், கோதுமைமாவின் விலை 26 வீதத்தினாலும் உயர்வடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நாட்டில் ஏற்பட்டிருந்த மோசமான காலநிலையினால் நெல் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டதனால் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த கால அரசாங்கங்களின் விலைக்கொள்கை உலக சந்தை விலை ஆகிய காரணிகளினால் கோதுமை மாவின் விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு 2600 கைதிகளுக்கு விடுதலை

(கொழும்பு)

2600 ஆவது சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு 2600 சிறைக் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 17ஆம் திகதி 2600 சிறைக் கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட உள்ளதாகவும், அதில் தமிழ், முஸ்லிம் கைதிகளும் உள்ளடங்குவதாகவும், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ. திசாநாயக்க தெரிவித்தார்.

பொது மன்னிப்பு அளிக்கப்படவுள்ள சிறைக் கைதிகளின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலுக்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், அப்பட்டியல் நீதியமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நீதியமைச்சிலிருந்து இப்பெயர்ப் பட்டியல் கிடைக்கப்பெற்றதும் இவர்களை 17ஆம் திகதி விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெற்று வரும் 4095 புலி உறுப்பினர்களில் 500பேரை சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு விடுவிக்க உள்ளதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பின் செயலாளர் ட.திசாநாயக்க தொழில்சார் கல்வியை பூர்த்தி செய்தவர்களும் அதில் அடங்குவதாக மேலும் தெரிவித்தார்.

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இடம்பெறவுள்ள பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தொடர்பான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி,நாளை ஒன்பதாம் திகதி யாழ்ப்பாண பிரதேசசெயலகக் கூட்டம்,யாழ்.பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் 11ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்திலும் அன்றைய தினம் பிற் பகல் 2மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையிலும் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி காலை 10மணிக்கு கரவெட்டி பிரதேச செயலகத்திலும், 16ஆம் திகதி காலை 9மணிக்கு வேலணை உதவி அரச அதிபர்மனையிலும் அன்றைய தினம் மாலை இரண்டு மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலும் கூட்டம் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகோற்சவம்


(வடமராட்சி)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் நாளை திங்கட் கிழமை புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்சம் வெள்ளோட்டமும் எதிர்வரும் 12ஆம் திகதி திருமஞ்சத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இறுதி நாளான 10 ஆம் நாள் காலை 9 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

# 19 ஆவது திருத்தச் சட்டமூலம்
# நீதிச் சேவைக்கு பெரும் இடையூறு
## எச்சரிக்கிறார் சரத் என் சில்வா



(கொழும்பு)

**19ஆம் திருத்தச் சட்ட மூலம் நீதிச் சேவைக்கு இடையூறுகளை விளைவிக்கும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். நீதி மன்றின் சுயாதீனத் தன்மைக்கு ஜனாதிபதி நேரடியாகத் தலையீடு செய்யும் ஒரு நடவடிக்கையாக 19ஆம் திருத்தச் சட்ட மூலத்தை நோக்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுத்தல் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்குதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் மேல்,கீழ் நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொள்கின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை தர்க்க ரீதியில் முரணானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டால் 65 வயதுக்கு முன்னர் ஓய்வு பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனவும், அவர் 65 வயதை அடைவதற்கு இன்னமும் பத்து ஆண்டுகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் பிரதம நீதியரசர் பதவி ஒப்பந்த அடிப்படையிலானதனைப் போன்று அமைந்திருக்கும் எனவும், இது நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மைக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரை ஜனாதிபதியே நியமிப்பதன் மூலம் ஏனைய நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கின்றார்.

செயலாளரை ஜனாதிபதி நியமித்தால் அது அரசியல் நியமனமாகவே கருதப்படுகின்றது. ஒட்டுமொத்த நீதிமன்றத்தையும் ஜனாதிபதியின் விரலில் கட்டுப்படுத்தக் கூடிய வகையிலான நிலைமையே இதுவாகும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## உபகரணம் வழங்கல்

(வடமராட்சி)

மீள்குடியேற்ற அமைச்சினால் வடமராட்சி கிழக்கிலுள்ள 80மீனவர்களுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.


இதில் முன்னுரிமை அடிப்படையில் ஆழியவளை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திலிருந்து 40 பயனாளிகளுக்கும் வெற்றிலைக்கேணி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திலிருந்து 40 பயனாளிகளுக்கும் இக்கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு 80 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (100)



வவுனியா நகரசபை செயலாளரை தமிழரசுக்கட்சி நகரசபை உறுப்பினர் அவமதித்ததைக் கண்டித்து கரைச்சிப்பிரதேச சபை ஊழியர்கள் நேற்று முன்தினம் பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதைக்காணலாம். (29)

# லஞ்ச,ஊழல் ஆணைக்குழு பணிகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை



(கொழும்பு)

லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிகள் விரைவில் மீள ஆரம்பிக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. 18ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் ஒரு சில தினங்களில் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு பணிகளை ஆரம்பிக்கும் என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள், நிதி மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுக்கான பெயர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவிற்கான பெயர்களும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் அதற்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றப் பேரவையில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, சபாநாயகர் சமால் ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

கொள்கை அடிப்படையில் நாடாளுமன்றப் பேரவையில் அங்கம் வகிப்பதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான ரணில் விக்ரமசிங்கவும், சுவாமிநாதனும் தீர்மானித்துள்ளனர்

# முல்லைக் கடற்கரை இப்போது உல்லாசப் பயணிகள் மையம்

முல்லைத்தீவு கடற்கரையில் திரளும் உல்லாசப் பயணிகளுக்கான வசதிகள் எதுவும் இல்லாமையால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடற்கரைப் பகுதிக்குத் தினமும் அதிக எண்ணிக்கையில் உல்லாசப் பயணிகள் வருகை தருவதால் இவர்களுக்கான குடிநீர், மலசல கூட வசதிகள் எதுவும் இல்லாமை யால், அதிக தூரத்தில் இருந்து வரும் இவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (40)

# நாடாளுமன்ற விவாதங்கள் இனிமேல் நேரடி ஒளிபரப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். ஆரம்பத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக வானொலியில் மாத்திரம் இது ஒலிபரப்பப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்

பி.பி.சி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியின் போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

எமது நாடாளுமன்ற விவாதங்களை இலங்கை மக்களுக்காக ஒளிரப்புவதற்கு சபாநாயகர் திட்டமிட்டுள்ளார் ஆரம்பத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படவுள்ளதால் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பத்தில் இருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

நேரடி ஒலிபரப்பு ஆரம்பித்தவுடன் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேலும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வர் என நம்புகிறோம் எனக் கூறிய அவர், இதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி பிரித்தானிய நாடாளுமன்றத்தின் அழைப்பின் பேரில் அந்நாட்டு நாடாளுமன்ற நடைமுறைகளை அறிந்து கொள்வதற்காக லண்டன் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலை.விரிவுரையாளர்களுக்கு சம்பள அதிகரிப்புக் கோரிக்கை

## ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்புக் கோரிக்கைக்கு தமது கட்சி ஆதரவளிப்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்புக் கோரிக்கை தொடர்பில் ஆராய ஐக்கிய தேசியக் கட்சியால் குழு ஒன்றை நியமித்திருந்தது. அந்தக் குழுவின் தலைவரான கபீர் ஹாசிம் இவ்வாறு தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு அரசாங்கம் வழங்கிய வேதன உயர்வு இது வரையிலும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வாக்குறுதியை நிறைவேற்றாது தனியார் பல்கலைக்கழங்களை அமைப்பதிலேயே அரசாங்கம் ஆர்வங்காட்டி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில், இலவச கல்வி முறை இல்லாது போகும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனிடையே, தமது குழுவினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் ஆராயப்பட்ட விடயங்கள் எதிர்வரும் நாட்களில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# லிபியாவில் இருந்து வந்தவர்களுக்கு கட்டணமின்றி புதிய கடவுச்சீட்டு

(கொழும்பு)

லிபியாவில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கையர்களுக்கு புதிய கடவுச்சீட்டுக்களை எந்த விதமான கட்டணங்கள் இன்றியும் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை விண்ணப்பம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சரவைக்கு சமர்பிக் கப்பட்டபோது இதற்குரிய அனுமதி அமைச்சரவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லிபியாவில் ஏற்பட்டுள்ள மோதல் நிலை காரணமாக தமது கடவுச்சீட்டுக்களை இழந்து இலங்கை வந்துள்ள இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்களை இந்த திட்டத்தின் கீழ் கட்டணம் இன்றி பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் தமது கடவுச்சீட்டுக்களை புதுபிக்கவோ அல்லது கடவுச்சீட்டு காலவதியாகும் முன்னர் தவறவிட்ட கடவுச்சீட்டுக்ககாக அபராதமாக 10 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்ற விதி முறைக்கு மாறாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ்மக்களின் அரசியல்...

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற உள்ளூர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நேர்மையான, நியாயமான அரசியலை நடாத்தவே நான் விரும்புகின்றேன். எமது மக்களின் அரசியல் உரிமைகளுக்கான தீர்வைப் பெறும் வரையில் தொடர்ந்தும் அரசியலில் இருப்பது எனது நோக்கம்.

### வேண்டாம் முரண்பாடு :

எமது பிரச்சினைகளை நாங் கள்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும். வேறு நாடுகள் வந்து தீர்க்க முடியாது. அதற்கு ஜனாதிபதி தயாராகவே உள்ளார்.

நாங்கள் அரசுடன் முரண்பட்டுக் கொண்டு அரசைப் பழிவாங்க வேண்டும் என்னும் நோக்கோடு அணுகினால் மீண்டும் முப்பது வருடத்தை வீணாக்க வேண்டிவரும்.

### வெறுமையில் முடிந்த போராட்டம் :

1950 முதல் 1980 ஆம் ஆண்டு வரை ஜனநாயக வழிப் போராட்டத்தை மேற்கொண்டோம். கிடைத்தது என்ன? ஒன்றுமேயில்லை. பின்னர் 1980 முதல் 2009 மே 18 வரை ஆயுதப் போராட்டம் மூலம் கிடைத்தது என்ன? ஒன்றுமில்லை. விடுதலைப் போராட்டத்துக்கான தேவை இருந்தது என்பதனை நான் மறுக்கவில்லை. நானும் ஆயுதம் ஏந்தினேன் என்பதற்காக அதனை நியாயப்படுத்த முன்வரவில்லை. ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் நாம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டும்.

### பழிதீர்க்கும் நோக்கம் :

தருஸ்மனின் அறிக்கை மூலம் பழி வாங்கலாம் எனவும், வாக்குவேட்டை நடத்தலாம் எனவும் சிலர் யோசிக்கின்றனர். ஆனால், கடந்த காலங்களில் இவையெல்லாம் எமக்கு எவற்றைத் தந்தது?

1978இல் 18 பேரும். 2004இல் 22 பேரும் நாடாளுமன்றம் சென் றவர்கள் மக்களுக்கு எதனைச் செய்தார்கள்?

அனைத்தையும் ஒரே இரவில் செய்து முடிக்க முடியாது. எது முதலில் கிடைக்கின்றதோ அதனை எடுப்பதே சரியானதாக முடியும்.

### சாத்தியமான தீர்வு :

13ஆவது திருத்தச் சட்டமே எமது மக்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த ஆரம்பமாக இருக்க முடியும். அதுதான் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையும் கூட. இதனை முதலில் நடைமுறைப்படுத்துமாறு நாம் அரசிற்குத் தெரிவிக்க வேண்டும். எனவே, சாத்தியமில்லாத ஒன்றுக்காக நாம் முயலக் கூடாது.

இந்தப் 13ஆவது திருத்தத்தில் முதலாவதாக மத்திய அரசுக்குரிய அதிகாரம், இரண்டாவது மாகாண சபைக்குரிய அதிகாரம், மூன்றாவது இணைப்புப் பட்டியல் என உள்ளது. இந்த இணைப்புப் பட்டியலை மாகாண சபையுடன் சேர்த்தால், கூடுதல் அதிகாரம் கிடைக்கும். இதுதான் முதலாவது 'பிளஸ்'.

இரண்டாவது பிளஸ் என்பது இரண்டாவது சபை - இந்தியாவின் மேற்சபை, கீழ் சபை என்பது போல இங்கும் ஒரு மேற்சபையை உருவாக்குதல். இதனை செனற் எனவும் அழைக்கலாம்.

இதனுடைய உரிமை சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், அதிகாரப் பகிர்வைப் பாதுகாத்தல் ஆகும்.

இவை நடைமுறைக்கு வந்தால் எமக்கு வேறெதுவும் தேவையில்லை. இதுவே நடை முறைச் சாத்தியமானது.

### அகலும் பாதுகாப்பு வலயங்கள் :

அடுத்தது அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பது எதிர்காலத்தில் இருக்க முடியாது. ஆனால், தென்னிலங் கையில் படை முகாம்கள் உள்ளது போல இங்கும் படை முகாம்கள் இருப்பது தவிர்க்க முடியாதது.

அண்மையில் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த ஒன்பது இடங்களான - கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், தந்தை செல்வாபுரம், தெல்லிப்பழை, பளை, வீமன்காமம் வடக்கு, தெற்கு, வறுத்தலைவிளான் என்பன விடுபடவுள்ளன. இதில், மூன்று இடங்கள் தவிர ஏனையவை முழுமையாக விடுவிக்கப்படவுள்ளன.

### சேறு பூசும் முயற்சி :

யாழ்.மாநகரசபையால் மேற் கொள்ளப்படவுள்ள கஸ்தூரியார் வீதி கடைத் தொகுதி கட்டும் பணிகள் சட்டபூர்வமாகவே மேற் கொள்ளப்பட்டது. மாநகர சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் இணைந்து இந்தப் பணியை ஏற்றுக்கொண்டன.

கடைத் தொகுதியைக் கட்டி முடிப்பதற்கு சுமார் 285 மில்லியன் ரூபா தேவை. ஆனால், இவ்வளவு பெரிய தொகை மாநகரசபையிடம் இல்லை. ஆனால், மாநகரசபை கடன் வாங்கலாம். 285 மில்லியன் ரூபாவைக் கடன் வாங்கினால், திருப்பிச் செலுத்த நீண்ட காலம் செல்லும்.

எனவே, இவற்றையெலாம் ஆராய்ந்து தனியாரிடம் கட்டித் தருமாறு பொறுப்புக் கொடுக்கப்பட்டது. அவர்களும் அதனைக் கட்டி மாநகரசபையிடம் கொடுத்தால், மாநகரசபை வாடகைக்கு விடும்.

எனவே, இதனை விரும்புகிறீர்களா? அல்லது மாநகரசபை கடன் எடுத்து நட்டத்தில் செல்வதை விரும்புகிறீர்களா?

### கருத்தியல் யுத்தம் செய்வோம் :

கருத்துக்களை கருத்துக்களாலேயே எதிர்கொள்ள வேண்டும். இதற்கு கருத்துச் சுதந்திரம் பேணப்பட வேண்டும். சில பிரமுகர்கள் மீதான மிரட்டல்கள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு எடுத்துச் செல்லவுள்ளேன்.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகா ரங்களுக்கான உதவி ராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக்கை நான் சந்திக்க முயற்சி செய்யவில்லை. ஆனால், உண்மைக்குப் புறம்பான இது போன்ற செய்திகளை சில ஊடகங்கள் என் மீதும், எனது கட்சி மீதும் வெளியிட்டு வருகின்றன.

### மக்களின் உயர்ச்சிக்கு :

அத்துடன், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேலும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. இதன்படி இந்திய அரசு உதவியுடன் உடனடியாக 10 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளன.

குடாநாட்டில் தற்போது அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது தொடர்பாகவும் உரிய கவனம் செலுத்தப்படும்.

இழுவைப்படகு மூலமான தொழில்கள் முற்று முழுதாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் குடாக்கடலில் மட்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மட்டும் பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப் படுவது தவறானதாகும். தென்னிலங்கை மீனவர்கள் இழுவைப் படகுகள் மூலம் முல்லைக் கடலில் வந்து மீன் பிடிப்ப தென்ற செய்தியும் தவறாகும்.

சுயலாப அரசியல் இல்லாத நடைமுறைச் சாத்தியமாகச் சிந்தித்து செயற்படுவதற்காகவே அரங்கம் உருவாக்கப்பட்டது. எனவே, அரங்கத்துடனான தொடர்புகள் தற்போதும் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கடற்கொள்ளை...

இதன்பின்னர், உலக கடற் வாணிபத்தில் 30 சதவீதமானவை இடம்பெறும் மலாகா பக்கம் இவர்களது பார்வை திரும்பலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. சோமாலியக் கொள்ளையர்களின் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகிறது.

அண்மை யில் இந்தியாவின் மும்பை நகருக்கு 800 கிலோமீற்றர் தூரத்தில் 24 சீன கடற்படையினருடன் பயணித்த கப்பல் கடத்தப்பட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த புதன்கிழமை கடற்கொள்ளை யர்களினால் கடந்தப்பட்ட இந்த கப்பல் சில மணிநேரத்தின் பின்னர் அமெரிக்க மற்றும் துருக்கிய கடற்படையினரால் மீட்கப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகளை தடுக்க இலங்கை கடற்பரப்பு பூரண பாதுகாப்புக்களைக் கொண்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். அத்துடன், சோமாலியக் கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகள் இலங்கை கடற்பரப்பிற்கு அப்பாலே இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுசன நூலகம்
ஆவணத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# ஆனையிறவில் உப்பு உற்பத்தி; சங்கானையில் சேலை அலங்காரம்

## குடாநாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதியில் கடல் நீர் மேலும் உட்புகுவதைத் தடுக்கும் வகையில் அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும், உப்பு உற்பத்தி நடவடிக்கை நிறுத்தப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்ற உள்ளூர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர் - செம்மணிப் பகுதியில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், கடல்நீர் உட்புகுந்து வருகின்றது. இதனால் விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள், உவர்நீராகி வருகின்றன. தற்போது கடல் நீர் உட்புகுவதனைத்தடுப்பதற்கான அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் இப்பகுதிகளிலுள்ள வயல் நிலங்களில் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியும் அத்துடன் உவர் நீர் பரவாதவாறு நிலமும் பாதுகாக்கப்படும்.

ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதன் மூலம் இரண்டாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. அத்துடன் ஆனையிறவில் உற்பத்தியாகும் உப்பு தரமானதாகவும், சிறந்தவையாகவும் இருந்ததுடன், நாட்டின் உப்புத் தேவையைப் பெருமளவில் நிறைவுசெய்தும் வந்திருக்கிறது. அத்துடன், பெருமளவு அன்னியச் செலாவணியையும் பெற்றுத்தரும்.

இதுபோன்றே சங்கானையில் சேலை வடிவமைப்பு மேற்கொள்வதற்காக 200 பேர் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கைத்தறித்தொழிலை மேற்கொள்ளவும் 50 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இதேபோன்று அச்சுவேலியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள கைத்தொழிற்பேட்டையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு பல்வேறு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதன் மூலம் எதிர்வரும் இரண்டு வருட காலப் பகுதிக்குள் சுயபொருளாதார ரீதியாகப் பலமாற்றங்களை ஏற்படுத்த முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சர் வாசுதேவ யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேசியமொழி, சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எதிர்வரும் 10 ஆம் திகதி குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

அரச திணைக்களங்கள், நீதித்துறை போன்றவற்றில் தேசிய மொழிகளை உரிய முறையில் பயன்படுத்துவது தொடர்பாக ஆராயும் வகையிலேயே இவரது குடாநாட்டுக்கான விஜயம் அமையவுள்ளது.

குடாநாட்டிற்கு வருகைதரும் அமைச்சர், யாழ்.செயலகத்தில் அரச அதிபர் உட்பட முக்கிய துறைத் தலைவர்களுடன் மேற்குறித்த விடயம் குறித்து ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது

## வவுனியா நகரசபை வழமைக்கு

(நெல்லியடி)

வவுனியா நகரசபை ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு நேற்று நிறைவுக்கு வந்துள்ளது.

வவுனியா நகரசபைச் செயலாளரை அவமதித்ததைக் கண்டித்து தமிழரசுக் கட்சியின் நகரசபை உறுப்பினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இப்பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கலந்துரையாடலின் பின்னர் நிறைவுக்கு வந்துள்ளது.

வவுனியா நகரசபை ஊழியர்களை ஆளுநரின் பிரதிநிதி ஒருவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற 3 உறுப்பினர்களும் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னரே இப் பணிப்புறக்கணிப்பு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஆளுநரின் பிரதிநிதியினால் இதுதொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டு ஒரு மாதகால அவகாசத்தினுள் தங்களுக்கான சாதகமான பதில்கள் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து பணிப்புறக்கணிப்பு நிறுத்தப்பட்டது தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் நகரசபை ஊழியர்கள் தாங்கள் இவ்வளவு காலமும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் வவுனியா நகர்ப்புறத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல்களுக்கு வருத்தம் தெரிவித்ததுடன், நகர சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் அலுவலக வேலைகளையும் உடனடியாக அவற்றைச் செயற்படுத்தி நிறைவு செய்வோம் என ஊழியர்கள் உறுதியளித்தனர்.

# காணிப் பயன்பாட்டு அலுவலகம் யாழ்.செயலகத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் 20ஆவது காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் நேற்று யாழ்.செயலகத்தில வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காணி அமைச்சின் பிரதி அமைச்சர் சிறிபால கம்லத், அமைச்சின் செயலாளர் அசோகா பீரிஸ், காணிப்பயன்பாடு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சிராந்தி பெர்னாண்டோ ஆகியோர் பிரதி அதிநிகளாகக் கலந்து கொண்டனர்.

முன்னதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசியக் கொடியை ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து பிரதம அதிதிகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டு நிகழ்விற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள 20 ஆவது காணிப்பயன்பாட்டுத் திணைக்கள அலுவலகத்தைக் காணி அமைச்சின் பிரதி அமைச்சர் சிறிபால கம்லத் நாடாவை வெட்டி வைபவரீதியாகத் திறந்துவைத்தார். அவ் அலுவலகத்தில் பிரதம அதிதிகள் யாழ்.அரச அதிபருடன் சிறிது நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன் பின்னர் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகு மார் தலைமையில் நடைபெற்ற கூட்டமொனறில் அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அதிகாரிகள் பங்குபற்றினர். இங்கு காணி அமைச்சின் பிரதி அமைச்சர் சிறிபால கம்லத் அமைச்சின் செயலாளர் அசோ காபீரிஸ், காணிப்பயன்பாட்டுக் கொள்கைத்திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் சிராந்தி பெர்னாண்டே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக மா நாட்டு மண்டபத்தில் அமைச்சர், பிரதி அமைச்சர் உள்ளடங்கிய பிரதம அதிதிகள் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் கலந்துரையாடல் ஒன்றிலும் பங்குபற்றினர்.

(பா,கா)

# விமான விபத்து

(பப்புவா)

இந்தோனேசியாவின் விமானமொன்று கடலில் விழுந்ததால் விமானத்திலிருந்த 27 பேரும் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு பப்புவா மாகாணத்திலிருந்து 400 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கைமானா நகருக்குச் சென்ற விமானமே நேற்றுச் சனிக்கிழமை கடலில் இவ்வாறு விபத்திற்குள்ளானது.

மோசமான காலநிலை காரணமாகவும், போதிய கருவிகள் இன்மையாலும் மீட்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தோனேசியாவின் பல தீவுகளுக்கிடையில் விமானம் மூலமாகவே போக்குவரத்து நடைபெறுகிறது. ஆசியாவில் மிக மோசமான விமான பாதுகாப்புப் பதிவுகளைக் கொண்ட நாடாகவும் இந்தோனேசியா விளங்குகிறது.

## ஒசாமாவின்...

அவரது கடைசிப் பேச்சு அடங்கிய ஓடியோவை வெளியிடப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## இராஜதந்திர...

ஓமான், குவைத், கென்யா, சீனா, கட்டார், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கே புதிய இராஜதந்திரிகள் அனுப்பப்படவுள்ளனர். முன்னாள் இராணுவத் தளபதி சாந்த கோட்டேகொட தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள் ளார்.

எதிர்வரும் இரண்டொரு வாரங்களில் அவர்கள் அனைவரும் தங்கள் நியமனங் களைப் பொறுப் பேற்றுக் கொள்ளவுள்ளதாக வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

# யானைகளின் தாக்கம் முல்லையில் அதிகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மீள்குடியேற்றம் செய்யப்படாத சில இடங்களில் யானைகள் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன், அவை பயன்தரு மரங்களை நாசம் செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதல் புதுக்குடியிருப்பு பகுதிகளிலேயே இந்த யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும், இப்பகுதிகளில் உள்ள தென்னை மரங்கள் மற்றும் ஏனைய மரங்களை அடியோடு முறித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இப்பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலும் இவ் யானைகளின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (40)

## பயங்கரவாதிகளுக்கு...

அநேகமான நாடுகளின் பிரதம நீதியரசர்களும் மாநாட்டில் கலந்துகொள்கின்றமை இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு மிக முக்கிய ஒன்றாக அமையும் என்று பிரதம நீதியரசர் அசோக்க என்.சில்வா மேலும் தெரிவித்தார்.

---

## இரட்டை வேடமிடும்...

கொண்டு ஜனாதிபதி உள்ளிட்ட ஒரு சிலரைக் கூண்டில் ஏற்றுவதற்காக பின்னால் விரட்டி ஓடி வந்து கொண்டிருக்கின்றார்.

சர்வதேச நாடுகள் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் பற்றிக் கேள்வியெழுப்பினாலும், அல்கொய்தா தலைவர் ஒசாமாவின் மரணம் குறித்துக் கேள்விகளை எழுப்புவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாவனையாளர் பாதுகாப்பு சங்கானையில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சங்கானை வர்த்தகர்கள் தமது நிலையங்களில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் அனைத்து விதிகளையும் பின்பற்றும்படி சங்கானை வர்த்தகர் மற்றும் கைத்தொழில் உரிமையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாவனையாளர் அதிகார சபையினர் யாழ்.குடாநாட்டிற்கு கொழும்பு பிரதான அலுவலகத்தில் இருந்து வருகை தந்த அதிகாரிகளும், யாழ்.மாவட்ட அதிகாரிகளும் இணைந்து கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையின் போது பொருட்களின் விலைகள் அதிகரித்து விற்றமை, விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்கள் விற்பனை, உத்தரவாத காலம் வழங்கப்படாமல் விற்பனை செய்தமை மற்றும் கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று பத்திரிகை வாயிலாக அறிய முடிகின்றது. எனவே எமது பகுதியில் திடீர் பரிசோதனை நடந்தாலும் நடக்கக்கூடும். இதனால் சட்டநடவடிக்கை தங்கள் மீது பாவனையாளர் அதிகார சபையினர் எடுக்கக்கூடும். ஆகவே மேற்கூறப்பட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

# மனிதாபிமான நோக்குடன் குவியும் நிதியுதவிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கி வந்த தனது மனிதாபிமான உதவித் தொகையை மேலும் 10 மில்லியன் யூரோவினால் அதிகரிக்க ஐரோப்பிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்த மேலதிக நிதியுதவி வழங்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்நிதியினூடாக இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோருக்கு நிவாரணம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பா இலங்கையில் ஆபத்தை எதிர்நோக்கும் சமூகங்களுக்கு பாரபட்சமின்றித் தொடர்ந்து சேவையாற்றும் எனவும், இந்நாட்டில் நிவாரண உதவிகளுக்கும் நீண்டகால அபிவிருத்திக்குமான இடைவெளியைக் குறைப்பதற்காகவும் செயற்படும் எனவும் சர்வதேச ஒத்துழைப்பு மனிதாபிமான உதவி மற்றும் நெருக்கடி பதிலளிப்புக்கான ஐரோப்பிய ஆணையாளர் கிறிஸ்டாலினா ஜோர்ஜீவா குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.